பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 8-10-61 ஞாயிறு | இதழ் 17

## தமிழரசாரை வரவேற்கச் சென்ற கூட்டத்தில் பொலீஸ் உதை!

### 'புதினம்' நிருபருக்கும் விழுந்தது!

சென்ற வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்-புகைவண்டி நிலையத்தில் தமிழரசுத் தலைவர்களை வரவேற்கக் கூடிநின்ற மாபெரும் கூட்டம் ஒரு சந்தர்ப்பத்தில் பொலீசாரின் கட்டுப்பாட்டுக்கு அடங்குவதாகஇல்லை. எதனாலோ ஆத்திரங்கொண்ட பொலீசார் சப்பாத்துக் காலினால் உதைக்குமேல் உதையாக உதைந்து கூட்டத்தை விரட்டினார்கள்! முன்வரிசையில் நின்ற கௌரவமான பலருக்கு இந்த உதைகள் விழுந்ததை, தானும் பக்கத்தில் நின்று சில உதைகளை வாங்கிக்கொண்ட 'புதினம்' நிருபர் தெரிவிக்கிறார்.

## 'தமிழ்த் தாயின் செல்வங்களே, வருக!'

"தலைவர்களே......வருக! தடுப்புக் காவலில் இடுக்கண் பட்ட ஏந்தல்களே! வருக! தியாகச் செம்மல்களே! வளமார் ஈழத்தமிழகத்தின் வாழ்வு காட்டும் வீரத்த தளபதிகளே வருக! வருக!" என்னும் கோஷங்கள் வானைப் பிளக்க, கர ஒலிகள் காதைத்துளைக்க, தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்த வடபகுதி எம்பிக்கள், கடந்த வியாழக்கிழமை நண்பகல் யாழ் நகர் வந்து சேர்ந்தனர்! புகையிரத நிலையத்தில் வரலாறு காணாத பெருங்கூட்டம்! வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வெளியே கையில் மாலைகளுடன் முகம் மலர, அகம் மகிழ, ஆவலுடன் காத்திருந்தனர்!—சத்தியாக்கிரக நாட்களுக்குப் பின்பு, இவ்வளவு பெருந்திரளான மக்கள் கூடியது இது தான் முதற்தடவை — புகையிரதநிலையத்திலிருந்து ஆஸ்பத்திரிவரை கார்கள் சாரிசாரியாக அணிவகுத்து நின்றன!

"யாழ்தேவி' மேடைக்கு வந்ததும்பல்லாயிரக்கணக்கான மக்கள் கையொலி எழுப்பி ஆரவாரித்தார்கள்! தலைவர்களின் கழுத்தில் நூற்றுக்கணக்கான பல வண்ண மலர்மாலைகளைச் சூட்டி அவர்களைத் தம் தலைமீது, சுமந்து கொண்டு வந்தார்கள் ஆர்வம் மிகுந்த வாலிபர்கள்! முதலில் 'இரும்பு மனிதன் நாகநாதனைத் தூக்கிக்கொண்டு வரும்போது பொது மக்களின் உற்சாகம் புகையிரத நிலையத்தில் கரை புரளத் துவங்கிவிட்டது! பொலிசாரும், தொண்டர்களும், உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரமும் நிலைமையைச் சீரடையச் செய்ய மிகவும் சிரமப்பட வேண்டி ஏற்பட்டது!

திருவாளர்கள். வீ. ஏ. கந்தையா, அ அமிர்தலிங்கம், எம். பாலசுந்தரம், கே. துரைரத்தினம், வீ. தர்மலிங்கம், முதலியவர்களை வரிசையாகத் தொண்டர்கள் சுமந்து வந்த காட்சி பார்ப்பவர்களின் உடலெல்லாம் புல்லரிப்பை ஏற்படுத்தியது! திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தை மாதர் குழாம் சூழ்ந்து நின்று மாலையிட்டு மலர்ந்த முகத்துடன் வரவேற்ற காட்சி மனத்தை விட்டகலாத ஒன்றாகும். புகைவண்டி நிலையத்தில் ஏராளம் பொலிசார் நிலைமையைச் சமாளிப்பதற்காக வந்திருந்தனர்! அங்கிருந்து சுமார் 100 யார் தூரத்துக்கப்பால் துப்பாக்கி தாங்கிய 50 பட்டாள வீரர்களும் ஒரு ராணுவ 'டிரக்' கில் காத்து நின்றனர். ஆனால், ஒரு சிறு நிகழ்ச்சியைத் தவிர, வேறு அசம்பாவிதங்களெதுவும் நிகழவில்லை!



## அரசியல் படுகொலை?



ஆபிரிக்கா நாட்டு விடுதலை வீரன் லுமும்பாவைப் படுகொலை செய்த அதே கொலைஞர்கள்தான் ஐ. நா. சங்கத்தின் காரியதரிசியாக இருந்து பெருந்தொண்டாற்றிய டாக் ஹமர்ஷில்டையும் கொலை செய்தார்கள்! வெள்ளையரின் அடிவருடிகளுள் இன்று முதன்மைபெற்றுத் திகழ்பவன் ஷோம்பே. பிரிட்டனும், ஷோம்பேயும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு டாக்கைக் கொலைசெய்யச் சதித்திட்டம் வகுத்த விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அம்பலப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன அவற்றுள் சில மர்மமான தகவல்களைப் புதினமும் இவ்விதழின் 5-ம் பக்கத்தில் தருகிறது.

## தந்தை 'செல்வா' எப்பொழுது வருவார்?

தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள இவ்வேளையில் லண்டனிலிருந்து ஒரு செய்தி கிடைத்துள்ளது. 'செல்வா' குணமடைந்து வருவதாயும் இம்மாதம் 21-ந்திகதி இலங்கைக்குப் புறப்பட இருப்பதாகவும் திரு. எஸ்- ஜே. வி, யின் புதல்வன் சந்திர ஹாசன் 'புதினம்' நிருபரிடம் தெரிவித்துள்ளார்! நவம்பர் 6-ந் திகதி கொழும்புத் துறைமுகத்தில் தமிழரசுத் தந்தை வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**8-10-61 முதல் 14-10-61 வரை**

மேடம்: தேகசுகம் தொடர்ந்து பாதிக்கப்படும். வயிற்றில் வெப்பு, வலிப்பு முதலியன ஏற்படலாம். நண்பர்கள் மூலமாகச் சில தொல்லைகள் உண்டாகலாம். குடும்ப விஷயங்களும் அமைதியாக இராது. ஆனுல் எதிர்ப்புக்களைச் சமாளித்து வெற்றிபெற முடியும்.

இடபம்: மாதாவழி பந்துக்களால் சங்கடங்கள் ஏற்படலாம். தேகசுகமும் நன்ருக இராது. பூமிப்பிரயோசன பலனுமுண்டு. நண்பர்கள் மூலமாகப் பல உதவி கிட்டும்.

மிதுனம்: இளைய சகோதர சகோதரிகளால்உதவியுண்டு, புதிய விஷயங்கள் தடைப்பட்டாலும் வெற்றிகரமாக முடிவுறும். வேலை அதிகமாக இருக்கும். மன நிம்மதி இராது.

கடகம்: கண்களில் சுகவீனம் உண்டாகலாம். உறவினருடன் சச்சரவுகள் காணப்படுகின்றன. ஆனுல் பொருள் விருத்தியுண்டு. முயற்சிகளும் பலிதமாகும்.

சிங்கம்: மனதில் அமைதி நிலவாது. குடும்பச் சூழ்நிலை சங்கடமானதாக இருக்கும். தேகசுகமும் பாதிக்கப்படும். ஆனுல் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிபெற முடியும்.

கன்னி: தேகசுகம் குறைவாக இருக்கும். போதிய வருவாயிருந்தாலும் செலவுகளும் அதிகமாக இக்கும். எதிர்ப்புக்களை வெற்றி கொள்ள முடியும்.

துலாம்: மனதில் அமைதி நிலவாது. புதிய விஷயங்கள் தாமதமாகத்தான் சித்தியாகும். நண்பர்களுடனும், இனசனங்களுடனும் சிறு விரோதங்களும் ஏற்படும். தேகசுகமும் சிறிது பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்: உங்கள் விஷயங்களில் சில முன்னேற்றம் காணப் படுகின்றது. புதுவிஷயங்களில் தலையிட்டு வெற்றி காணமுடியும். ஆனுல் நண்பர்களிடையே சிறு விரோதங்கள் காணப்படுகின்றன.

தனுசு: நீங்கள் நினைத்த வண்ணம் கருமங்களைச் சாதிக்க முடியும். சத்துரு ஜயமும், பொருள் விருத்தியும் உண்டு. கோட் சொல்லுபவர்களால் குடும்பத்திற் சிறு கலகங்கள் உண்டாகலாம்.

மகரம்: ஞாயிற்றுக் கிழமை காலை சிறு சங்கடங்கள் நேரலாம். மிகுதி நாட்கள் தொழில் விஷயங்களுக்கு அனுகூலமாக இருக்கும். ஆனுல் பிரயாசம் அதிகமாக இருக்கும். பிதாவழி பந்துக்களால் உதவி உண்டு.

கும்பம்: ஞாயிறு, திங்கள், செவ்வாய் வாரங்களை அவதானமாகக் கழிக்கவும். வார நடுப்பகுதியின் பின் புது விஷயங்களில் வெற்றியுண்டு. கீர்த்தியும் சமூக விஷயங்களில் முன்னேற்றமும் உண்டாம்.

மீனம்: குடும்ப விஷயங்கள் சிறிது நாட்களுக்குச் சங்கடமாக இருக்கும். செவ்வாய் பிற்பகல், புதன், வியாழன் தினங்களை அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்களில் தொழிலில் முன்னேற்றம் காணப்படுகிறது.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினுல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினுல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

**அறிவித்தல்**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலிருக்கும்
**திரு. குருசாமி தனபாலசிங்கம்**
எமது யாழ் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தாரின்
**'யாழ் சோப்' விற்பனைக்கு**
யாழ்ப்பாண மாவட்ட விற்பனைப் பொறுப்பாளராக 4-10-61 தொடக்கம் நியமிக்கப்பெற்றுள்ளாரென்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிருேம்.

99, மானிப்பாய் வீதி, —யாழ். இன்டஸ்றீஸ் லிமிட்.
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

# கண்டதும்... கேட்டதும்...

### ஏன் இப்படிப் புளுகுகிருர்கள்.

ஒவ்வொரு தகப்பனும், ஏன் தாயும்கூட, தனது மகன் அல்லது மகள் பள்ளிக்கூடத்தில் 'மார்க்' குறைவாக வாங்கினுல், காலையில் எழுந்திருந்து படிக்காவிட்டால், அல்லது பாட புத்தகத்தைப் படிக்காமல் கதைப் புத்தகத்தை வாசித்தால், ''நான் ஸ்கூலில் படித்த காலத்தில்......" என்று ஆரம்பித்து அண்டப் புளுகு ஆகாயப் புளுகு எல்லாம் புளுகுவதை நாம் தினமும் பார்க்கிருேம்; கேட்கிருேம்.

எந்தத் தகப்பனுவது தான் மாணவனுக இருந்த காலத்தில் குறைய 'மார்க்' வாங்கியதாகவோ குறும்பு செய்ததற்காக பெஞ்ச்' மீது ஏறி நின்றதாகவோ பரீட்சையில் 'கொப்பி' அடித்ததற்காக "பப்ளிக் கேனிங்" வாங்கியதாகவோ, ஸ்கூலுக்குப் போகாமல் கொய்யாத்தோட்டத்தில் கும்மாளமடித்ததற்காக பெற்ருேரிடம் முதுகுத் தோல் உரிபட அடி வாங்கியதாகவோ ஒளிவு மறைவின்றிக் கூறுகின்ருர்களா? அப்படி யாராவது கூறுகின்ருர்களாயின் அவரை அரிச்சந்திரனின் வாரிசாக கொண்டு அவருக்கென்று தனியாக ஒரு கோயிலும் கட்டி வைக்கலாம். இந்தப் போலிக் கௌரவம் பரம்பரையாக இருந்து வருகின்றதெனலாம். "நான் பள்ளியில் படித்த காலத்தில் முழு முட்டாளாயிருந்தேன், ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு மூன்று தடவை குண்டடித்தேன். எஸ். எஸ். சி. பாஸ்பண்ணினது எனக்கே ஆச்சரியமாயிருக்கு. எந்த முட்டாள் 'எக்ஸாமினர்' என்னைப் பாஸாக்கினுனே தெரியாது!" துணிந்து மெய் பேசக்கூடியஆசாமி யாராவது உண்டா? அப்படி யாராவதுஇருப்பாரேல் இந்தச் சண்டாள உலகம் அவருக்குகோயில் கட்டிக் கும்பிடாமல் அங்கொடையில் கொண்டு போய்விட்டுவிடும் என்பது திண்ணம்.

### காதலன் காதலி விவகாரம்:

இன்னெரு கெட்டபழக்கமும் நம்மிடையே இருந்து வருகிறது. ஒரு பெண் புத்தியறிந்து பத்து வருடங்களுக்குமேல் பெற்ருேருக்குப் பாரமாயிருந்திருப்பாள். அழகோ, பணமோ அல்லது அதிர்ஷ்டமோ இல்லாத காரணத்தால் பேசி வந்தசம்பந்தங்கள் குதிராமல் போயிருக்கும். பிறகு வெள்ளி துலாவுக்கு வந்ததாலோ அல்லது ஒரு அப்பாவிப் பையனின் மோட்டுத் தனத்தாலோ தாலி கழுத்தில் ஏறி, கணவன் என்ற உருவத்தில் அவன் அவளுக்கு அடிமையாவான். தாலி கட்டிக் கொண்ட பின்னர் அவளைக் கேட்டால், இல்லைக் கேட்காவிட்டாலும், ''பீ. ஏ. வந்தான், எம். ஏ. வந்தான், கோடீஸ்வரன் கேட்டான், குபேரன் கேட்டான், முதலியார் வீட்டுப் பையன் கண்ணைக் காட்டினுன், முகாந்திரத்தின் மைந்தன் கையைக் காட்டினுன். அவர்களையெல்லாம் வேண்டாமென்றுசொல்லிப்போட்டு பாருங்கல்லைக் கட்டிக் கொண்டு பாழுங் கிணற்றில் விழுந்த மாதிரி உன்னட்டை களுத்தை நீட்டினேனே என்று குறைபட்டுக் கொவாள்.

இந்த மாதிரி எட்டாக் கனிக்கு கொட்டாவி விடுவதில் இந்தக் காலத்துப் பையன்கள் சளைத்தவர்களல்ல. காதல் என்பார்கள், கத்தரிக்காய் என்பார்கள். கல்யாணம் என்றவுடன் 'சீதனம் எவ்வளவு?' என்பார்கள். 'பெடிச்சியும் விரும்புகிருளே' என்று அவளைப் பெற்ருேர் ''பார்த்துப் பாராமல் கொடுத்துக்" கல்யாணம் செய்து வைத்தால், சதிபதிகள் சண்டைபோட ஆரம்பித்ததும்கணவன் பிலாக்கணம் வைக்கத் தொடங்கி விடுவான். ''ஐம்பதாயிரம் அறுபதாயிரம் கொண்டுவந்

(11-ம் பக்கம் பார்க்க)

## தீபாவளிச் சேலைஅலங்காரம்!
## சிறந்த போட்டோவுக்கு
# பரிசு!

'புதினம்' தீபாவளிச் சிறப்பிதழில் பெண்களின் சேலை அலங்காரப் பக்கம் ஒன்று வெளியிடுகிருேம். அதற்கு அழகாகச் சேலை அணிந்த பெண்களின் போட்டோக்கள் தேவை. மிகச் சிறந்த ஒரு போட்டோவுக்கு முதல் பரிசும், மற்றும் பிரசுரத்துக்காக எடுக்கப்பட்ட மூன்று அல்லது நான்கு படங்களுக்குச் சன்மானமும் வழங்கப் பெறும்.

- படங்கள் 'போஸ்காட்' அளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
- படத்துடன் குறித்த பெண்கள் அணிந்துள்ள சேலையின் பெயர், நிறம் முதலிய விபரங்களும், அந்தச் சேலைக்கு ஏற்றதாக அவர்கள் தெரிவு செய்து அணிந்துள்ள சட்டையின் விபரமும், குறிப்பிடவேண்டும்.
- படங்களை 12-10-61 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக, புகைப்படப் போட்டி, புதினம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு கீழே உள்ள கூப்பனுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

புகைப்படக் கலைஞர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவார்களென்று எதிர்பார்க்கிருேம். குறித்த பெண்கள் மூலமாக இல்லாமல், புகைப்படக் கலைஞர் மூலமாக போட்டோ அனுப்பப்பெற்றுப் பரிசு கிடைக்குமானுல், குறித்த போட்டோக் கலைஞரின் படமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுக் கௌரவிக்கப்படும்.

**சேலை அலங்காரப் புகைப்படப் போட்டி.**

பெண்ணின் பெயர்: ..............................

முகவரி: ..............................


**படத்தைப் பிரசுரிக்கச் சம்மதித்துக் கையொப்பம்:**

..............................

புகைப்பட கலைஞரின் பெயர்: ..............................

முகவரி ..............................

**பெண்களே படத்தை அனுப்பினுல் படக் கலைஞரின் பெயர் அவசியமில்லை.**




கடந்த 10-9-61 'புதினம்' இதழில் வெளியாகியிருந்த "இலக்கிய உலகில் சில பரபரப்பான சம்பவங்கள்" என்ற தொகுப்பைக் கண்டு எனக்கு வியப்பும், வருத்தமும் தோன்றின: தமிழ் நாட்டில் நடைபெறும் இத்தகைய விவாதங்களை எவ்வளவு உன்னிப்புடன் ஈழ நாட்டு வாசகர்களும்—எழுத்தாளப் பெருமக்களும் கவனித்து வந்திருக்கிருர்களென்பதை அறிந்ததில் வியப்பும், சரிவர முழு விபரங்களையும் அறிய முடியாத காரணத்தால், அவர்கள் எத்தகைய தவருன முடிவுக்கு வந்துவிடநேரிடுகிறது என்பதை நினைத்தபோது வருத்தமும் ஏற்பட்டன.

கட்டுரையாளரான திரு. சுகுமாரனும், வாசகர்களும் அறிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக இத்துடன் நண்பர் திரு. ஜெயகாந்தன் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையொன்றை நகல் எடுத்து இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

புதுடில்லி. —ஏ. ஆர். ராஜாமணி.

1-10-61 புதினம் இதழில், ஐந்தாம் பக்கத்தில் வெளியாகியிருந்த ''பல்சுவை புதினம்'' என்ற பகுதியில் 'தர்மா மீட்டர்' (THERMAMETRE) என்பதைப் 'பாகை மானி' எனக்குறிப்பிட்டிருந்தது தவருகும். பாகைமானி என்பது ஒரு கோணத்தின் பாகையை அளக்கும் (DEGREE) அளவாகும். 'தர்மா மீட்டர்' என்று சொல்வது, 'உஷ்ணமானி''

யாழ்ப்பாணம். —டி, ஏ. முத்துகுமார்

கடந்த மாதம் கனம் கல்வி மந்திரி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது (தங்களைத் தாங்களே சிறுபான்மையோர் எனக் கூறிக் கொள்ளும்) மகாசபை ஒன்று, வேலையற்ற ஆசிரியர்கள் நியமனம் பற்றி மந்திரியவர்களைப் பேட்டி கண்டார்கள். அதன் பயனுக, சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த பன்னிரண்டு பேர்களுக்கு (பட்டதாரிகள் உள்பட) அடுத்தமாதத்தில் நியமனம் கிடைக்கப்போகிறதாம். அவர்களுக்குச் சில கட்டாய நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்களம் கட்டாய பாடமாகக் கற்கவேண்டும். நியமனத்தின் போது ஓரளவாவது சிங்களம் தெரிந்திருக்கவேண்டும். அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் அடங்கி நடக்கவேண்டும் முதலியவைகள் தான் அந்த முக்கியமான நிபந்தனைகளாம்.

கொழும்பில் நடைபெற்ற ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சைக்குச் சென்று திரும்பிய மகாசபையைச் சேர்ந்த ஒரு பட்டதாரி வாலிபர் இந்தத் தகவலைத் தனது சகாக்களுக்குச் சொல்லி ஆனந்தப்பட்டாராம்!

யாழ்ப்பாணம். —''சம்பத்''

கடந்த 17-9-61 தேதி 'புதினம்' இதழில், திரு. சம்பத் அவர்களின் தமிழ் தேசியக் கட்சி பற்றிய அரசியல் விமர்சனக் கட்டுரை, ஆணித்தரமான அரசியல் நோக்கும், தெளிவும் உள்ள ஒரு சிறந்த கட்டுரையாகும்.

செய்திச் செறிவும், விவகார விமரிசனமாகப் பல விஷயங்களும் பத்திரிகைகளில் இடம்பெற்று, வாசகர்களின் கவனத்தைப் பலவாருக ஈர்த்து வரும் இந்த நேரத்தில், சுவையான சர்வதேச விவகாரங்கள், செய்திகள் ஆகியவை ஒரு பக்கத்திலோ, அல்லது பத்திரிகையின் மூன்று 'கல' அளவுக்கோ இடம்பெறச் செய்தால் அதுபத்திரிகையின் தன்மைக்கு மேலும் மெருகூட்டும்படியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சென்னை-2 —அன்ன. அரசுமுகம்.

'' களனி நதி தீரத்திலே...'' என்ற தொடர் கதையைப் படித்து வரும் கதைப்பிரியர்களில் நானும் ஒருவன். வாசக நேயர்களின் உள்ளத்தில் என்றும் உறையக் கூடிய இவ்வுன்னத படைப்பை விரைவில் நிறுத்தி எங்களை ஏமாற்றி விடாதீர்கள். தொடர்ந்து பல காலத்திற்கு இக்கதை வெளிவர வேண்டுமெனத் தங்களை வேண்டுகின்றேன்.

கற்கோவளம். —கே. ஜீ. ஏ.

மூதூர் தொகுதி மக்களில் அநேகர் ஏழைகள். உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றிக் கஷ்டப்படுகின்ருர்கள். இது ஒரு புறமிருக்க, கடந்த வாரம் கல்வி மந்திரி இப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த போது, ஆயிரக்கணக்கான ரூபா செலவு செய்து விருந்துகளும், களியாட்டங்களும், ஜோடனைகளும் பல இடங்களில் நடைபெற்றன; இதற்கான செலவுப்பணம் ஒரு எம். பி. யினுலும் அரிசி ஆலை முதலாளிமார்களாலும், ஆசிரியர்களாலும் சேர்க்கப்பட்டதே. இந்தப் போலி வரவேற்பு உபசாரங்களைக் கண்டு கல்வி அமைச்சர், இப்பகுதி மக்கள் தன்னையும் தனது கட்சியையும் பெரிதும் ஆதரிக்கிருர்களென்று பகற்கனவு கண்டிருக்கக்கூடும்.


ஏராளமான பணச் செலவால் கிண்ணியாக் கிராமத்தில் அமைச்சருக்காகச் செய்த ஜோடனைகளும், விசேட மேடைகளும் திடீரென ஏற்பட்ட மழையின் காரணமாக, குறித்த கோஷ்டியினருக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது. போலி விஷயங்களை ஆண்டவன் கூட விரும்பவில்லை போலும்!

—ஜே. எம். சாதிக்கின்
மூதூர்.

## "யானை விரட்டல்" தோல்வி!

' அவசரகால நிலைமையை வாபஸ் பெறும்படி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானம் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்தது!

– செய்தி



# அதிர்ஷ்டம் அணைத்தது நடிகையானேன்!

## ‘சபாஷ் மீனு’ கூறுகிறூர்.

[குசும் குமாரி என்ற பெயருடன் திரையுலகில் புகுந்தவரும் “சபாஷ் மீனு” மூலம் பிரபலமடைந்தவருமான நடிகை மாலினி, தான் சினிமாஉலகில் புகுந்த விதம்பற்றி இங்கு கூறுகிறூர்.]

என் வாழ்க்கையில் மக்களால் பாரட்டப்படும் ஒரு சினிமா நடிகையாக ஆவேன் என்று நான் கனவுகூடக் காணவில்லை. சினிமாவில் நடிப்பதென்பது எனது கற்பனைக்கு அப்பாற்பட்ட விஷயமாகத்தான் அப்போது இருந்தது. நான் எந்தச் சினிமாவையும் பார்த்து நடிக்கவேண்டுமென்று கனவு காணவில்லை. எந்த நடிகையையும் பார்த்து அந்த நடிகையைப்போல் புகழ் பெறவேண்டும் என்று நினைக்கவில்லை. கலைமோகங் கொண்டு அதை எப்படியும் வளர்க்கவேண்டும் என்ற பேராவல் கொள்ளவில்லை. அதிர்ஷ்டம் என்னைத் தேடிவந்தது. சினிமாவில் நடிக்கும் வாய்ப்பும் என்னைத் தேடிவந்தது.


### தேடிப்போகவில்லை; நாடிவந்தது!

அப்பொழுது சாதனு புரொடக்ஷன்ஸார், அவர்கள் தயாரித்து வந்த “சந்தானம்” படத்திற்காக புதுமுகம் தேடிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம்போய் நடிக்க வாய்ப்புக்கேட்கவில்லை. சாதனு புரொடக்ஷன்ஸாருக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் தெரிந்த நண்பரொருவர், சாதனு புரொடக்ஷன்ஸாருக்குப் புதுமுகத்தைத் தேடிக்கொடுத்ததோடு என்னையும் படத்தில் நடிக்கவைத்தார். என் வீட்டாரும் அதை ஆட்சேபிக்கவில்லை!

இனியும் நான் எந்தப் படத்திலும் நடிக்கவலுவில் போகமாட்டேன். படமுதலாளிகள் அழைத்தால் தான் நடிக்க இசைவேன்.

### ஆடம்பரம் எதற்கு?

நான் ஆடம்பர வாழ்க்கையை விரும்பவில்லை. சினிமா நடிகைகள் ஆடம்பர வாழ்க்கை நடத்தித்தான் ஆகவேண்டுமென்று சிலர் கருதுகிறூர்கள். அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தலாமென்பதே என் கருத்து. என்கருத்துக்கு ஏற்றபடிநான் எளிய வாழ்க்கை நடத்தி வருகிறேன். நடை, உடை, பாவனை எதிலும் எனக்கு ஆடம்பரம் கிடையாது.



மனேகர் பிக்சர்ஸ் ‘‘மதுரை மன்னன்’’ படத்தில் சம்பந்தப்பட்டவர்கள்.

இயக்குநர்: நாராயணமூர்த்தி. (கறுப்புக் கண்ணுடியுடன் இருப்பவர்) M. N. ராஜம், சகஸ்ரநாமம், இலங்கையைச் சேர்ந்த உதவி இயக்குநர் எஸ். இரத்தினம் (வலது கோடி)

## “கல்லூரியில் காதலா?” எம். ஜி. ஆர். கண்டனம்!

கேள்வி:— இந்த ஆண்டோடு எனக்குக் கல்லூரிப் படிப்பு முடிகிறது. கல்லூரியில் என்னேடு படிக்கும் ஒரு மாணவியை நான் உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறுள். பெற்றேர்கள் சம்மதத்தோடு அடுத்த ஆண்டு இருவரும் திருமணம் புரிந்து கொள்ளப் போகிறேம். காதலிலே வெற்றி பெற்ற எங்களுக்கும் மற்ற இளைஞர்களுக்கும் தாங்கள் கூறும் அறிவுரை என்ன அண்ணு?

எம். ஜி. ஆர். பதில்:

பெற்றேர்கள் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்ளப் போகிறேம், என்ற செய்தி மகிழ்ச்சிக்குரியது தான். ஆனல் உங்களைப் போன்ற மாணவ இளைஞர்களுக்கு நான் விடுக்கும் அறிவுரையல்ல; வேண்டுகோள் இது தான்;

மாணவர்கள் அரசியலில் ஏன் பங்குகொள்ளக் கூடாது என்று பெரியார்கள் சொல்கிறூர்கள்? மாணவர்கள் அறிவில்லாதவர்கள் என்ரே, அரசியலைத் தெரிந்து கொள்ளத் தகுதியில்லாதவர்கள் என்ரே பொருளல்ல. கல்வி பயிலும் நேரத்தில் தங்களை வேறு பிரச்சனைக்கு உட்படுத்திக் கொண்டு. கல்வியைப் பாழ்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதே காரணம். அரசியலைப் போலத்தான் காதலும். ஓர் ஆணே, பெண்ணே வயது வந்த பிறகு (அல்லது தகுதியான நிலை வந்தபிறகு) உடற் பசியைத் தீர்த்துக் கொள்ளவும் உள்ள எழுச்சியைத் தணித்துக் கொள்ளவும் வாழ்க்கையில் ஒரு நிறைவைப் பெறவும் மணஞ் செய்து கொள்ள விரும்புவது கூடாத ஒன்றல்ல; தேவையற்றதுமல்ல, ஆனல் கல்வி பயிலும் நேரத்தில் இந்த உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு விட்டால், பெரும்பாலானவர்களுக்கு அது வாழ்க்கையைச் சோக முடிவில் கொண்டு வந்து விட்டு விடலாம், அந்தக் கல்வித்துறையில்.

எனக்குத் தெரிந்தவரை, வாய்ப்பும் வசதியுமுள்ள இடங்களிலிருந்து கல்லூரிக்கு வரும் மாணவர்கள் மிகச் சிறுபான்மையினரே. கடன் பட்டோ, இருக்கும் கொஞ்சம் சொத்துக்களை விற்ரே, தங்கள் குழந்தைகள் கல்வி பயின்று தங்களை வாழவைக்குமென்ற ஆசையில் பெற்ரேரால் கல்லூரிக்கு, அனுப்பி வைக்கப்படுவோரே பெரும்பான்மையினர் தந்தையற்ற மகன், தான் பயிலுங்கல்வியை ஊன்றிப் படித்துத் தேர்ந்தால்தான் தாய்க்கு ஆதரவாக இருக்கமுடியும்; தாயின் நம்பிக்கை மட்டுமல்ல; அவளுடைய எல்லா எண்ணங்களுமே அந்த மகனின் கல்வி முன்னேற்றத்தின் அடிப்படையில்தான் உருவாக இருக்கின்றன.

ஆதலால் இத்தகைய நிலைமையில் மாணவ இளைஞர்கள் கல்வி நேரத்தில் காதலுக்கு இடந் தருவாராயின் கல்வியுங் கெட்டுக் காதலும் தடைப்பட்டு, தாயையும், சார்ந்த குடும்பத்தையும் காக்க முடியாத விளைவையே தருவதாகிவிடும்.

— நடிகன் குரல்.

## சந்திரபாவுக்கு மீண்டும் கிராக்கி!

நடிகர் ஜே. பி. சந்திரபாபுவுக்கு இப்பொழுது மீண்டும் ‘கிராக்கி’ ஏற்பட்டுள்ளது. சில காலத்துக்குமுன் ஏராளமான படங்களில் அவர் நடித்துக் கொண்டிருந்தார். ஆனல் அதன் பிறகு சிலகாலமாக அவரைப் பற்றிய பேச்சு அதிகமாக அடிபட்ட பொழுதிலும், அவர்நடிக்கும் படங்களின்தொகை என்னவோ குறைவாகவே தான் இருந்தது. அனேகமாக ‘கதாநாயகன் ஸ்தானம்’ கிடைத்த பின்னரே, இந்தநிலை ஏற்பட்டதென்று கூறலாம். ஆனல் அது நிலைக்கவில்லை. இப்பொழுது மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே நடித்துக் கொண்டிருக்கும் இரண்டொரு படங்களுடன் இப்பொழுது ‘தாய்வீடு’, ‘சாரதா’ ஆகிய புதிய படங்களுக்கும் அவர் ஒப்பந்தஞ் செய்யப்பட்டிருக்கிறூர். ‘‘தாய்வீடு’’ படத்தில் புதுமுகம் சாந்தியும், “சாரதா”வில் புதுமுகம் புஷ்பலதாவும் அவருக்கு ஜோடியாக நடித்திருக்கிறூர்கள்.

## சிவாஜி—சரோஜாதேவி சர்க்கஸ்!

பிரபல எழுத்தாளர் அகிலனின் “வாழ்வு எங்கே?” என்ற கதையை “குலமகள் ராதை” என்ற பெயரில் தயாரித்து வரும் ஸ்பைடர் பிலிம்ஸார், தங்களது படத்தில் சிவாஜி கணேசன், சரோஜா தேவி, தேவிகா ஆகியோர் சர்க்கஸ் விளையாட்டுகள் செய்யும் காட்சியை புகுத்த ஏற்பாடு செய்திருக்கிறூர்கள். இந்தக் காட்சி “குலமகள் ராதை”யில் சிறப்பு அம்சமாக இருக்குமாம். படம் அனேகமாக ஜனவரி மாதத்தில் வெளிவரலாம். ஏ. பி. நாகராஜன் இதை டைரக்ட் செய்கிறூர். ஹாஸ்ய நடிகர் டி, என். சிவதானு இதன் தயாரிப்பாளர்.

## இடதுகை எழுத்தாளர் சாவித்திரி!

நடிகை சாவித்திரி ஒரு இடதுகை எழுத்தாளர். தமிழ், தெலுங்கு பத்திரிகைகளுக்கு கட்டுரை, கதை எழுதுகிறூர். அவர் எழுதிய கதை, கட்டுரைகளைச் சேமித்து ‘ஆல்பமாக’ வைத்திருக்கிறூர். இது பலருக்கு இன்னமும் தெரியாது. அவர் தன்னுடைய பேனுவுக்கு பச்சைமையையே பயன்படுத்துகிறூர்.

## “ஞானசௌந்தரி” மலையாளம் பேசுவாள்!

தமிழில் இரு “ஞானசௌந்தரிகள்” வெளிவந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இப்பொழுது அவளை மலையாளம் பேச வைக்க அசோசியேட் புரொடியூஸார் ஏற்பாடு செய்கிறூர்கள். ஆம்-“ஞானசௌந்தரி” என்ற கிருஸ்தவக்கதை இப்பொழு மலையாளத்தில் தயாராகிறது. இதில் பிரேம் நஸீர், திக்குரிச்சி, விஜயலட்சுமி ஆகியோர் நடிக்கிறூர்கள் படம் கிருஸ்து ஜயந்தி தினத்தில் வெளிவரலாம்.

## சாவித்திரியின் 100-வது படம்.

தெலுங்கு “பாகப் பிரிவினை” இப்பொழுது ஆந்திர மாநிலமெங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. இது சாவித்திரி நடித்த 98-வது படமாகும். சாவித்திரி நடித்த படங்களின் எண்ணிக்கை இந்தவருடக் கடைசிக்குள் 100-ஆகலாம். அனேகமாக சாவித்திரி நடிக்கும் 100-வது படமாக எம். வி. ராமன் தயாரித்துக் கொண்டிருக்கும் “கொஞ்சும் சலங்கை” படம் இருக்கலாம்.

— பஞ்சவர்ணன்.

# 'டாக்' மரணம் விபத்தல்ல-- திட்டமிடப்பட்ட சதி?

## இதோ, தகவல்கள்!

**அடுத்துக் கெடுக்கும் வெள்ளையரின் அடிவருடிகள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள்! தாங்கள் வாழவேண்டுமென்றால் வாழட்டுமே. அதற்காக நல்லது செய்பவர்களை ஏன் நாசமாக்க முனையவேண்டும்?**

**ஐ. நா. காரியதரிசியாக இருந்து உலகமே புகழ்ந்து போற்றும்படி கடமையாற்றிய திரு. ஹமர்ஷில்டுக்கு நேர்ந்த அகாலமரணத்தின் பின்னணியிலுள்ள இரகசியங்களை ஆராய்கிறது இக்கட்டுரை.**

ஐ. நா. சபைக் காரியதரிசி டாக் ஹாமர்ஷீல்டின் மரணத்துக்காக உலக சமாதான பிரேமிகள் அனைவரும் கண்ணீர் வடிக்கின்றனர். நெஞ்சம் பொருமுகின்றனர்—வஞ்சகர்களின் சூழ்ச்சியால்தான் சமாதான தூதுவராக கடங்காவுக்குப் பறந்துசென்ற டாக் வழியில் கொலை செய்யப்பட்டார் என்ற சந்தேகம் நாளுக்குநாள் வலுக்கிறது! டாக்கின் மரணம் வெறும் விபத்தாலல்ல- திட்டமிடப்பட்ட படுகொலை என்பதற்குப் பல ஆதாரங்கள் இப்போது கிடைத்துள்ளன.

ஆபிரிக்க நாட்டு விடுதலை வீரன் லுமும்பாவைப் படுகொலை செய்த அதே கொலைஞர்கள்தான் டாக்கின் கொலைக்கும் சூத்ரதாரிகளாகும். இந்தக்கொலைச் சதியில் பிரிட்டனுக்கும் பெரும்பங்கு இருக்கிறதென்பது தெரியவந்துள்ளது.

வெள்ளை மனிதர்களின் குஷால் புரியாக — பொன் கொழிக்கும் நாடான நிலக்கரிச் சுரங்கங்களுள்ள கடங்கா பிரதேசத்தை-என்றும் வெள்ளையர் வசம் வைத்திருப்பதற்காக- எத்தனையோ சூழ்ச்சிகளும்,. பாதுகாப்புகளும், செய்து பல பாதந் தாங்குபவர்களை அங்கே வைத்திருக்கிறார்கள் வெள்ளையர்கள். வெள்ளையரின் கைப்பொம்மைகளில் ஒருவன்தான் ஷோம்பே—இந்தக் கூட்டத்தாரின் வசம் ஒரு பயங்கரக் கொலைகாரன்—எத்தனை பாதகத்தையும் செய்யப் பயப்படாதவன் —பெயர் கொலனல் ரேருகர்டிரிங்கர் இருக்கிறான். அவன் முன்பு பிரெஞ்சுப் பட்டாளத்தில் பணியாற்றியவன். பலே சதிகாரன். இவனைப்பற்றி ஐ. நா. சபை இரகசிய பைல்களில் பல தகவல்களிருக்கிறதாம். இவனைக் கையாளாக வைத்துத்தான் பிரிட்டனும் ஷோம்பேயுமாக டாக்கை படுகொலை செய்துள்ளனராம். ஹமர்ஷீல்டை கொலைசெய்தவன், ரேருகர்டிரிங்கரின் உதவியாள் ஜூலியன்காற் என்றகொலைகாரன்.

டாக்கை இந்த மரணப் பொறியில் விழுத்த நடந்த ஏற்பாடுகள் இதோ:—

கடங்காவிலுள்ள மைக்கேல் ஏம்பர்லின் என்ற ஐ நா. தகவல் அதிகாரி எலிசபெத், வில் என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டார். அதையடுத்து சூழ்ச்சிப்படைகளால் ஐ.நா. பாதுகாப்பு படைகள் திடீரெனத் தாக்கப்பட்டன. ஐ. நா. படைகள் திரும்பித் தாக்கின. உடனே பிரிட்டன் ஐ. நா. படைகளின் செயலை ஆட்சேபித்தது!—இது சதியின் முதல் அங்கம்.

தாக்குதலைத் தவிர்ப்பதற்காக ஷோம்பேயுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளும்படி டாக் நெருக்கப்பட்டார். அதற்காக அவர் லியோபால்ட்வில் என்ற இடத்திலிருந்து காங்கோவுக்கு — 1000மைல் காட்டிற்குமேலாக விமானத்தில் செல்ல வேண்டும். இதைபாதுகாப்பாற்றவெளியூடாகபறந்து செல்லுவதிலுள்ளஆபத்து டாக்குக்குத் தெரிந்திருந்ததால், எத்தியோப்பியஜெட் விமானம் ஒன்றை இரவல் வாங்கி பயணத்தைத் துவங்கினார். ஆனால் எத்தியோப்பிய விமானம் தமது பிரதேசத்துக்கு ஊடாகப் பறக்கக் கூடாது என பிரிட்டிஸ் தூதுவர் ஆட் ஆட்சேபித்தார். சமாதான தூதுவராக செல்பவரை ஏற்றிச் செல்லும் விமானம் பறப்பதில் பிரிட்டனுக்கு என்ன சங்கடமோ?— சதிதான் காரணம்!

செப்டம்பர் 17-ந் திகதி ஒரு பச்சைப்பொய்—உலகவரலாறு காணாத படு பொய்அவிழ்க்கப்பப்பட்டது! —டாக்கும் ஷோம்பேயும் வட ரொடீசியாவிலுள்ள இந்தோலா விமான நிலையத்தில் சுமுகமாக பேச்சுவார்த்தையிலீடுபட்டுள்ளனர் என செய்தி அறிவிக்கப் பட்டது. ஆனால் உண்மையென்ன? டாக் அப்போதும் ஆகாயவெளியில் பயணம் செய்துகொண்டிருந்தார். இந்தச் செய்தி சதியின் ஒரு அங்கமாக அமெரிக்க, பிரித்தானிய பத்திரிகைகளால் உண்மையை மூடிமறைக்க சிருஷ்டிக்கப் பட்ட வெறும் கப்ஸா!

எத்தியோப்பிய விமானங்கள் தமது பிரதேசத்துக்கூடாக பறக்கப்படாதென பிரிட்டன் ஆட்சேபித்ததால் பாதுகாப்புவிமானமின்றி காங்கோ நாடுகளின் மேலாக ஹாமர்ஷீல்டின் விமானம் பறந்தது. அவர் தமது உத்தியோகத்தர்களுடன்சமாதான ஏற்பாடு சம்பந்தமான விபரங்களை சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

இந்தோலா விமானத்தளத்தை சமீபித்தவுடன் திடீரென ஏதோ சந்தேகம் ஏற்படவே, விமானத்தை அங்கு இறக்க வேண்டாமெனவும் திருப்பும்படியும் விமானியிடம் கட்டளையிட்டார்.

ஆனல்...விமானிதிருப்புவதற்கிடையில், திடீரென டுமீல்......டுமீல் ......டுமீல் ......பயங்கர வெடிகுண்டுகள்! விமானம் வெடித்து நொறுங்கி விட்டது! அனைவரும் படுகொலைசெய்யப்பட்டனர்!

இந்தப்படுகொலையை செய்தவர்கள் வெள்ளையர்களின் கைப்பாவைகளாக விளங்கும் ஷோம்பே, முனங்கோ, ரேருகர்டிரிங்கர் என்பவர்கள். சதித்திட்டதை வகுத்துக் கொடுத்து கொலைக்கானசூழ்நிலையை உருவாக்கிவைத்தது பிரிட்டன் என உலக நாடுகள் அபிப்பிராயப்படுகின்றன. ஐ. நா. வுக்கு இந்த பகிரங்க இரகசியம் தெரிந்திருந்தும் வாழாவிருப்பது கையாலாகாததனம்தான்.

# கல்லூரி மாணவிமீது நள்ளிரவில் பலாத்காரம்?

ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு இளம் பெண் மீது நள்ளிரவில் பலாத்காரம் புரியும் நோக்கோடு அவளின் அறையுள் நுழைந்ததாகவும், அவள் ஆட்சேபிக்கவே அவள் சிநேகிதியைப் பிடித்து இழுத்ததாகவும், சென்னையிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் மனேஜர் எனக் கருதப்படுபவர் ஒருவரைப் போலிசார் தேடும் முயற்சியிலீடுபட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 17ந் திகதி நள்ளிரவு இந்த பலாத்கார எத்தனச் சம்பவம் இந்தியன் ஏயர் லைன்ஸ் கோப்பரேஷன் அலுவலகத்துக்கு எதிரே உள்ள பெரிய மாடிகொண்ட ஏயர் லைன்ஸ் ஹோட்டலில் நடைபெற்றதாம்! அந்த ஹோட்டல் மனேஜராக இருந்தவர் எஸ். எம். தாக் அல்லது தாக்கி சிங்க்.

செல்வி. மத்தேயு என்ற மலையாளப்பெண் எர்ணகுளம் என்னுமிடத்திலுள்ள கல்லூரியொன்றில் படிப்பவள். அவள் சம்பவம் நடந்த அன்று சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் சென்னைக்கு வந்திருந்தாள். அன்று கொச்சின் செல்லும் விமானம் போய் விட்டதால், மறுநாள் பயணம் செய்வதற்காக, இந்த ஹோட்டலில் தங்கவேண்டி ஏற்பட்டது, அவள் தனியே தங்க விரும்பாமல் சென்னையில்படித்துக்கொண்டிருக்கும் வசந்தி என்ற சிநேகிதியையும் துணைக்கு அழைத்து வைத்துக்கொண்டு படுத்தாள். இரவு 10 மணிவரை இரண்டு பேரும் கதைத்துக்கொண்டிருந்துவிட்டு உறங்கி விட்டபொழுது, கதவில் டக் டக் கென யாரோ தட்டினார்களாம். திறந்து பார்த்த பொழுது மனேஜர் தாக்சிங் நின்றுகொண்டிருந்தாராம். 'எல்லாம் வசதியாக இருக்கிறதோ? ஏதாவது வேண்டுமோ?', என விசாரித்தாராம். அந்தப் பெண்கள் எதுவும் வேண்டியதில்லை எனச் சொல்லவே அவர் போய்விட்டார்.

சிறிது நேரத்தில் மீண்டும் வந்து கதவில் தட்டினாராம். அந்தப் பெண்களை தன்னுடன் ஐஸ் கிறீம் குடிக்க வரும்படி அழைப்பு விடுத்தாராம்! அந்தப் பெண்கள் அதை ஆட்சேபிக்கவே, திடீரென மனேஜர் சிங் செல்வி வசந்தியைப் பிடித்து இழுத்து கற்பழிக்க முயற்சித்தாராம்!

இரு பெண்களுமாக மனேஜரை எதிர்த்து, அவர் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு வெளியே தெருவுக்கு ஓடிச் சென்று விட்டார்கள்.

நடுத்தெருவில் நள்ளிரவில் இந்தப் பெண்கள் பரிதாபமாக கலங்குவதைக் கண்ட நல்லுள்ளம் கொண்ட ஒருவர், பத்திரமான ஒரு இடத்தில் இவர்களுக்கு தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தாராம்.

பொலிசாரால் குற்றச் சாட்டுகளுடன் தேடப்படும் இந்த மனேஜர் தாக்சிங் பெரிய ஆசாமி. நாற்பது வயது இருக்கும்! கலியாணம் செய்தவர்; பல பாஷைகள் பேசக்கூடியவர்; படித்தவர்போல தோற்றங் கொண்டவர் எனத் தெரிகிறது. இவருக்கு எதிராக சென்னை போலிசார் குற்றம் பதிவு செய்துள்ளனர். ஆசாமி இன்னும் பிடிபடவில்லை.


மேற்படி கருத்தடங்கிய செய்தியொன்றை, பம்பாயிலிருந்து வெளிவருவதும் ஒன்றரை லட்சத்துக்கதிகமான பிரதிகள் விற்பனையாவதுமான ஆங்கில வாரப் பத்திரிகை 'பிளிட்ஸ்' அண்மையில் வெளியிட்டுள்ளது இந்தச் செய்தியைச் சென்னையிலுள்ள அந்தப் பத்திரிகையின் நிருபர் எழுதியுள்ளார்.

இலங்கையிலுள்ளவர்கள் — குறிப்பாகத் தமிழர்

[ 11-ம் பக்கம் பார்க்க ]

ஆயிரம் மைல்களுக்கப்பால் பிரிந்து வாழ்ந்த போதும் உணர்ச்சியால் ஒன்றுபட்டு வாழ்ந்த

# அதிசயமான இரட்டைக் குழந்தைகள்!



இரட்டைக் குழந்தைகள் பிறப்பதைப் புதுமையானதாக, நூதனமான சம்பவமாக, மிகப்பழைய காலந்தொட்டு மக்கள் கருதி வருகிறார்கள். மனித குலத்தின் கற்பனையை இந்தக் குழந்தைகள் அடிக்கடி கிளறி விடுகின்றன! சாதாரணமக்கள் இச் சம்பவங்களை அதிசயமாகக் கருதி வருவதுமட்டுமல்ல — மருத்துவ விஞ்ஞானிகள் கூட தங்களது மண்டையைக் கிளறி இதுபற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் அக்கறையோடு! இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு, உற்பத்தி அவர்களை ஒட்டிய பிரச்சனைகள் முதலியவற்றைப்பற்றி ஆராய்ச்சிகள் நடாத்த சோவியத் அரசாங்கம் மொஸ்கோவில் ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனத்தையே நடத்திவருகின்றது. அமெரிக்காவிலுள்ள தேசிய இரட்டையர்கள் சங்கம் ஆண்டுதோறும் வயதில் கூடிய சோடிக்கும், இளம் சோடிக்கும், அழகான கவர்ச்சியான சோடிக்கும் பரிசுகளே வழங்குகின்றது - போட்டி நடத்தி!

விடுப்புக்கும் மனிதர்களின் விசேஷ அக்கறைக்கும் ஆளாகின்ற இந்த இரட்டைக் குழந்தைகள் எப்படிப் பிறக்கின்றன? இரண்டு வழிகளால் இரட்டைக் குழந்தைகள் கர்ப்பத்தில் உருவாகலாம். பெண்ணின் சினை முட்டைகளில் இரண்டு கர்ப்பைப் பையுள் விழுந்து ஏககாலத்தில் வளர்ச்சியடைவது —ஒருவழி. பெரும்பாலான இரட்டைக் குழந்தைகள் இந்த வகையில்தான் உருவாகின்றன.

அடுத்தது; சினையுற்ற ஒரு முட்டை வெடித்து இரு பிரிவுகளாக மாறி வளர்ச்சியடைவது. இப்படியான உற்பத்தி மிக அபூர்வமாகவே நிகழ்கின்றது. இந்த வகையில் பிறக்கும் குழந்தைகளே ஒரே சாயலுள்ளவையாகவும், பெரும்பாலும் ஒரே உணர்ச்சி கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

பெண்ணின் கர்ப்பப் பையுள் விழுந்த சினைப்பட்ட முட்டை ஒழுங்காக வெடிக்காமல் வளர்ச்சியடைவதால், பிறக்கிற குழந்தைகளிரண்டும் ஒன்றோடு ஒன்று உடம்பு ஒட்டியபடி அமைந்து விடுகின்றன. இதை சயாம் இரட்டைக் குழந்தைகள் (Siamese Twins) என்பர். இப்படியாக ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளில், நூறுக்கு இருபது வீதம் கூட தப்புவது அருமை. இரண்டு தலைகளும் ஓர் உடம்பும் அல்லது ஒரே உடம்பில் நாலு கால்களும் கைகளுமாக பிறக்கும்போது அமைந்திருப்பதால் சத்திர சிகிச்சை மூலம் வெவ்வேறாக பிரிக்கப்படும்பொழுது, அவை இறந்தே விடுகின்றன.

இவை தவிர, ஒட்டாமல் வெவ்வேறாகப் பிறக்கின்ற இரட்டைக் குழந்தைகள் ஒரே நேரத்தில் பிறந்துவிடுவதில்லை. ஒருகுழந்தை பிறந்து சிலமணி நேரத்துக்குப் பிறகு அல்லது 2, 3 நாட்களுக்குப் பிறகுதான் மற்றக் குழந்தை பிறக்கும். இந்தியாவில் ஒரு வங்காளப் பெண் பிரசவித்து 45 நாட்களுக்குப் பிறகுதான் மற்றக் குழந்தையைப் பெற்றெடுத்த சம்பவமும் நடைபெற்றிருக்கிறது! தனித்தனி முட்டைகள் மூலம் தாயின் கர்ப்பைப் பையில் வளர்ந்த இந்தக் குழந்தைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாக அல்லது ஒரே திகதியில் பிறந்தவையாக இருக்கவேண்டுமென்பதில்லை. ஆனால் ஒரேசினை முட்டை வெடித்து இரு பிரிவாகி அப் பிரிவுகள் மூலம்கர்ப்பப்பையில் வளர்ச்சியடைந்து பிறக்கிற இரட்டைக் குழந்தைகளைப் பற்றித்தான் ஆச்சரியமும் அக்கறையும் காட்டப்படுன்றது. ஆமாம், அவர்கள் ஒரே சாயலுள்ளவராக, ஒரே இனமாக, ஒரே உணர்ச்சியுள்ளவர்களாக அமைந்து, ஒருவரது நகல்போல மற்றவர் விளங்குவார்! இப்படிப்பட்ட குழந்தைகள் வளர்ந்தபின் மிக நெருங்கிய நண்பர்களால் கூட வித்தியாசம் காணமுடியாமலிருக்கும்! அசாதாரண உணர்வொற்றுமை, சாயல் ஒற்றுமை இருப்பதால், சில இரட்டையர்களில், ஒருவரது கையெழுத்தைப் போலவே அடுத்தவரதும் இருக்கிறது!

நியூயார்க்கிலுள்ள ஒரு டாக்டர்-பெயர் எப். ஜே கால்மன், 60 வயதுள்ள 1000 இரட்டையர்களைப் பரிசோதித்துப் பார்த்தபோது—அவர்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு வாழ்க்கை அமைப்பில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களாக இருந்தபோதும், ஒருவருடைய உள்ளம், உடல் வளர்ச்சிபோலவே அவருடனே பிறந்தவரதும் இருப்பதை அறிய முடிந்ததாம்.

இரட்டையர்களிடையில் நிலவும் அதி ஆச்சரியமான ஒற்றுமை பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஒரு சோடி ஆண்(இரட்டை) குழந்தைகளை இரண்டு குடும்பங்கள் வெவ்வேறாகத் தந்து எடுத்து வளர்த்தனர். இந்த இரண்டு குடும்பங்களும் வசித்த ஊர்களுக்கிடையிலிருந்த தூரம் 1000 மைல்களுக்கும் அதிகம். அதனால் வளர்ந்து வரும்போது இக் குழந்தைகள் ஒருவரை ஒருவர் சந்திக்கவேயில்லை. ஆனாலும், அவர்களிடம் கீழ்க்கண்ட ஒற்றுமைகள் தென்பட்டன. அவர்கள் மணந்துகொண்ட பெண்கள் ஒரே குணமும், ஒரே வயதுள்ளவராகவும் இருந்தார்கள். இருவரும் மின்சாரத்துறையில் பயிற்சி பெற்றவராக விளங்கினர். இருவரும் ஒரே செல்லப் பெயரால் அழைக்கப்பட்டனர். இருவருக்கும் ஒரே காலத்தில் சுகவீனம் ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பற்களையும் இழந்தனர்!

இரட்டையர்களில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டால் அல்லது சுகவீனம் கண்டால் அது மற்றவரிலும் தெரிகிறது! சிக்காகோவில் இரட்டைக் குழந்தைகளைப்பெற்றெடுத்த ஒரு பெண், ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தையை சில நாட்களுக்கு விட்டுவிட்டு மற்றொரு குழந்தையை மட்டும் தன்னுடன் கொண்டுபோய் வளர்த்தாள். வீட்டில் வளர்ந்த குழந்தை திடீரென ஒருநாள் நெருப்பில் எரிந்துவிட, ஆஸ்பத்திரியில் இருந்த குழந்தை தனக்கு நெருப்புச் சுட்டதுபோல பதறித் துடித்துக் கதறியதாம்!

இலங்கையில் கூட அண்மையில் இப்படி ஒரு பரிதாப சம்பவம் நடந்தது. பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்துகொண்டிருந்த குழந்தையொன்று பாழுங் கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. கூட வந்த மற்றக் குழந்தையும் உடனே அக்கிணற்றில் விழுந்துவிட்டது! இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டன!- பாவம்; அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகளாம்.

இரட்டைக் குழந்தைகள் பெறுவது மகிழ்வாக வரவேற்கப் படுவதில்லை— திருத்தமடையாத சாதியினர் பண்டைக்காலத்தில், இரட்டைக் குழந்தைகள் தோன்றுவதற்குப் பலகாரணங்களைக் கற்பித்துக் கொண்டார்கள்.

ஆனால், இன்று காலம் மாறிவிட்டது. விஞ்ஞானம் என்ற பிரகாசமான விளக்கொளியில் இரட்டைக் குழந்தைகள் எதனால், எப்போது, எப்படிப் பிறக்கின்றன என்பதையறிந்து கொள்ள முடிகிறது.

35 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் பெண்களுக்கு இந்த இரட்டைப் பிள்ளைகளைப் பெறும் 'பாக்கியம்' ஏற்படும்! அதுவும் அந்தப் பெண் ஏற்கனவே 5 முதல் 8 பிள்ளைகளுக்குத் தாயாக இருக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த பிரசவம் 'இரட்டைக் குழந்தைப்' பிரசவமாக இருக்கும்! 30 க்கும் 39க்கும் இடைப்பட்ட பெண்ணொருத்தி ஏற்கனவே 8 தனிக் குழந்தைகளைப் பெற்றிருந்தால், ஒன்பதாவது பிரசவம் இரட்டைக் குழந்தைப் பிரசவம் தான்!—கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக 3000க்கும் அதிக பிரசவங்களை நுட்பமாகப் படித்து ஆராய்ந்து மேல் நாடுகளில் எடுக்கப்பட்ட முடிவு இவை.

மேலும் ஒரு பெண் இரட்டைக் குழந்தைகளில் ஒருவராகப் பிறந்திருந்தால் அவள் வளர்ந்து தாயா
கிப் பிரசவிக்கும் குழந்தை
களும் இரட்டையர்களா
கவே இருக்கும் என ஆரா
ய்ச்சியாளர்கள் அபிப்
ராயப் படுகிறார்கள். ஆன

## 'சயாமிஸ்' டுவின்ஸ்

1811-ல் சீயம் தேசத்தில் ஒரு சீனப் பெண்ணுக்கு 'இரட்டைக் குழந்தை'ப் பிரசவம் நடந்தது. அந்தக் குழந்தைகளின் நெஞ்சும் இடுப்பும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிப்போய் இணைந்திருந்தன. அந்த ஆண் குழந்தைகளுக்கு சாங், எங் எனப் பெயரிட்டிருந்தார்கள். கண்காட்சி நடத்துமொருவனுக்கு அவர்களைத் தாய்விற்றுவிட்டாள். ஐரோப்பாவெங்கிலும் காட்சிப் பொருள்களாக அவர்கள் கொண்டு திரியப் பட்டனர்!

பிரான்சுக்கு காட்சிக்காக இவர்களைக் கொண்டுபோன பொழுது, அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்துவிட்டது—காட்சியில் இவர்களைப் பார்க்கிற பிரெஞ்சுக் கர்ப்பிணிகள் பெறும் குழந்தைகள் இரட்டையர்களாக ஒட்டிப்போய் விடலாமென அரசாங்கம் அஞ்சியது!

வடகரோலினாவைச் சேர்ந்த இரு சகோதரிகளை இவர்கள் மணந்து 22 பிள்ளைகளைப் பெற்றார்கள்!

1874-ல் ஒருவர் குடியினால் இறக்க, அவரைத் தொடர்ந்து அடுத்த 2-30 மணி நேரத்துள் பாவம்!- அதிர்ச்சியினால் மற்றவரும் இறந்துவிட்டார்!

இவர்களிலிருந்தே ஒட்டிப் பிறக்கின்ற இரட்டைக் குழந்தைகளையெல்லாம் எல்லா நாட்டிலும் 'சயாமிஸ் டுவின்ஸ்' என அழைக்கிறார்கள்!

## கடைசிச்

● சென்ற வாரம்
யில் கொச்சிக்கடையை
(35 வயது) என்ற பெ
குழந்தைகளைப் பெற்றி
தைகளிரண்டும் சௌக்

●● டேவிட் வில்
கர் தமது நடிகை ம
கள் பிரசவிப்பதற்கு
தார்—அதனால் அண்ண
குழந்தைகளைப் பெற்ற
சூரன்ஸ் கம்பனி கொ

அதற்காக அவனின் கன
னத்தைத் தடவி நான் கம்மாப்பாட்டிக்கு சின்ன

டு வாழ்ந்த

# தழந்தைகள்!

மணந்துகொண்ட பெண்கள் ஒரே குணமும், ஒரே வயதுள்ளவராகவும் இருந்தார்கள். இருவரும் மின்சாரத்துறையில் பயிற்சி பெற்றவராக விளங்கினர். இருவரும் ஒரே செல்லப் பெயரால் அழைக்கப்பட்டனர். இருவருக்கும் ஒரே காலத்தில் சுகவீனம் ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பற்களையும் இழந்தனர்!



இரட்டையர்களில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டால் அல்லது சுகவீனம் கண்டால் அது மற்றவரிலும் தெரிகிறது! சிக்காகோவில் இரட்டைக் குழந்தைகளைப்பெற்றெடுத்த ஒரு பெண், ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தையை சில நாட்களுக்கு விட்டுவிட்டு மற்றொரு குழந்தையை மட்டும் தன்னுடன் கொண்டுபோய் வளர்த்தாள். வீட்டில் வளர்ந்த குழந்தை திடீரென ஒருநாள் நெருப்பில் எரிந்துவிட, ஆஸ்பத்திரியில் இருந்த குழந்தை தனக்கு நெருப்புச் சுட்டதுபோல பதறித் துடித்துக் கதறியதாம்!

இலங்கையில் கூட அண்மையில் இப்படி ஒரு பரிதாப சம்பவம் நடந்தது. பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்துகொண்டிருந்த குழந்தையொன்று பாழுங் கிணற்றில் தவறி விழுந்து விட்டது. கூட வந்த மற்றக் குழந்தையும் உடனே அக்கிணற்றில் விழுந்துவிட்டது! இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டன!— பாவம்; அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகளாம்.

இரட்டைக் குழந்தைகள் பெறுவது மகிழ்வாக வரவேற்கப் படுவதில்லை— திருத்தமடையாத சாதியினர் பண்டைக்காலத்தில், இரட்டைக் குழந்தைகள் தோன்றுவதற்குப் பலகாரணங்களைக் கற்பித்துக் கொண்டார்கள்.

ஆனால், இன்று காலம் மாறிவிட்டது. விஞ்ஞானம் என்ற பிரகாசமான விளக்கொளியில் இரட்டைக் குழந்தைகள் எதனால், எப்போது, எப்படிப் பிறக்கின்றன என்பதையறிந்து கொள்ள முடிகிறது.

35 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் பெண்களுக்கு இந்த இரட்டைப் பிள்ளைகளைப் பெறும் 'பாக்கியம்' ஏற்படும்! அதுவும் அந்தப் பெண் ஏற்கனவே 5 முதல் 8 பிள்ளைகளுக்குத் தாயாக இருக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த பிரசவம் 'இரட்டைக் குழந்தைப்' பிரசவமாக இருக்கும்! 30 க்கும் 39க்கும் இடைப்பட்ட பெண்ணொருத்தி ஏற்கனவே 8 தனிக் குழந்தைகளைப் பெற்றிருந்தால், ஒன்பதாவது பிரசவம் இரட்டைக் குழந்தைப் பிரசவம் தான்!—கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக 3000க்கும் அதிக பிரசவங்களை நுட்பமாகப் படித்து ஆராய்ந்து மேல் நாடுகளில் எடுக்கப்பட்ட முடிபு இவை.

மேலும் ஒரு பெண் இரட்டைக் குழந்தைகளில் ஒருவராகப் பிறந்திருந்தால் அவள் வளர்ந்து தாயாகிப் பிரசவிக்கும் குழந்தைகளும் இரட்டையர்களாகவே இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆணைப் பொறுத்தவரை அவன் இரட்டைக் குழந்தைகளில் ஒருவனாகப் பிறந்திருந்தாலும் அவன் மனைவி பிரசவிப்பது இரட்டையாக இருக்கும் என்பதில்லை. உடற் தத்துவ ஆராய்ச்சி முடிபுப்படி இரட்டைக் குழந்தைகள் பிறப்பது 'பரம்பரை வாசனை' தான்—அதிலும் அவை பெண் சந்ததி மூலமாகவே தொடர்ந்து வாழையடி வாழையாக தொற்றிக் கொள்ளுகின்றன!

ஒருதடவை மட்டும்தான் ஒருபெண் இரட்டைக் குழந்தைகளாகப் பிரசவிக்க முடியுமென்பதில்லை: நாகரிக நாரீமணிகள் பலரே மூன்று தடவை இரட்டைக் குழந்தைகளாகப் பிரசவித்துள்ளனர். இத்தாலியில் அண்மையில் ஒருத்தி ஆறுவது தடவையாக இரட்டைக் குழந்தைகளை ஈன்றிருக்கிறாள். சில வருடங்களுக்குமுன் சிசிலி தேசத்தில் ஒரு பெண் 11 வருடத்தில் 11 இரட்டைக் குழந்தைகளைப்பெற்றெடுத்திருக்கிறாள்! 1929-ல் ஒரு அமெரிக்க மாது இரண்டு தடவை இரட்டைக் குழந்தைகளை ஈன்றெடுத்தாள் (ஒரு ஆண்டில் 4 குழந்தைகள்! இன்னும்)இப்படி ஏராளம் பிரசவங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

ஹெல்லின்ஸ் என்னும் பிரெஞ்சு உடற் தத்துவ நிபுணரின் ஆராய்ச்சி முடிபுப்படி சாதாரண 87 பிரசவங்களில் ஒன்றுதான் இரட்டைக் குழந்தைப் பிரசவமாகும். மூன்று குழந்தைகளைப் பெறும் பிரசவம் 87x87 சாதாரண பிரசவங்களுக்கு ஒன்று; நான்கு குழந்தைகளைப் பெறும் பிரசவம் 87x87x87 சாதாரண பிரசவத்துக்கு ஒன்று. பிறப்புப் பதிவுப் புள்ளி விபரப்படி, ஹெல்லின்ஸுடைய தத்துவம் சரியானதென ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

## கடைசிச் செய்தி

● சென்ற வாரம் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் கொச்சிக்கடையைச் சேர்ந்த மேரி கத்தரின் (35 வயது) என்ற பெண் ஒருசோடி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள். அந்த ஆண்குழந்தைகளிரண்டும் சௌக்கியமாக இருக்கின்றன.

●● டேவிட் வில்லியம்ஸ் என்ற சினிமா நடிகர் தமது நடிகை மனைவி இரட்டைக் குழந்தைகள் பிரசவிப்பதற்கு எதிராக இன்சூர் செய்திருந்தார்—அதனால் அண்மையில் அவள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றபோது 300 பவுன்கள் இன்சூரன்ஸ் கம்பனி கொடுக்கவேண்டி ஏற்பட்டதாம்!

# 'டெய்லிமிரர்' பத்திரிகையின் ஆசிரியருக்குச் சவால்!

## பொலிசுக்கு டிமிக்கி கொடுத்த கைதி!

பல்வேறு குற்றங்கள் புரிந்ததற்காக சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்த கைதிகளில் 10 பேர் லண்டனிலுள்ள உவண்ட்ஸ்வேர்த் சிறைச்சாலையிலிருந்து திடீரெனத் தப்பி ஓடிவிட்டார்கள்—பொலிசார் அவர்களைப் பிடிப்பதற்கு நாடெங்கிலும் வலை போட்டுத் தேடினார்கள். லண்டன் "டெய்லிமிரர்" பத்திரிகை, தேடப்படும் அந்தக் கைதிகளின் புகைப்படத்தை முன்பக்கத்தில் பிரசுரித்து, அவர்களைப் பிடிப்பதற்கு பொலிசாருக்கு உதவும்படி பொது மக்களைக் கேட்டிருந்தது.

இவர்களில் 7 பேர் பிடிக்கப்பட்டனர். மற்றும் மூன்று கைதிகள் பொலிசாருக்கு தொடர்ந்து டிமிக்கி கொடுத்துக்கொண்டு தலைமறைவாகத் திரிந்தனர். சென்றஆகஸ்ட்மாதம் 3-ம் திகதி பெஞ்சமின் கூப்பர் என்ற தேடப்படும் ஒரு கைதி 'டெய்லிமிரர்' பத்திகையாசிரியருக்கு ஒரு கடிதமும் தனது புகைப்படமும் அனுப்பிவைத்தான்!— அந்தக்கடிதத்தில் "நான் மிகவும் குஷாலாகவே திரிகிறேன் .......... உங்களுக்கு டெய்லி மிரர் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு சுவையான செய்திகள் தேவையானல் தினமும் ஒவ்வொன்று அனுப்பிவைக்கிறேன்!" என பத்திரிகையாசிரியரை நையாண்டி செய்வது போல எழுதியிருந்தான்!

இந்தக் கடிதத்தைப் பரிசோதித்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் அந்த எழுத்துக்கள் பெஞ்சமின் கூட்பர் என்ற கைதியுடையதே எனவும், அவன் மாறு வேடத்தில் திரியலாமெனவும் அபிப்பிராயப்படுகின்றனர். அந் நபருக்காக பொலிசாரின் வேட்டை தொடர்கிறது

# இரண்டு கண்களும் இல்லாத குருடர் கார் ஓட்டுகிறார்!

## கைகள் இல்லாதவருக்கு சாரதி லைசென்ஸ்!

கார்ச்சாரதி லைசென்ஸ் உள்ளவர்களுக்கு - அவர்களது தகுதியையறிவதற்காக காலத்துக்குக் காலம்—ஒரு சோதனையை வைக்க வேண்டுமென்ற திட்டத்தின்படி அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற முதல் சோதனையில் 1960,00 கார்ச்சாரதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் 30,000 பேர் தமது லைசென்சுகளை இழந்தனர். இந்தத் தெரிவில் இன்னும் பல சுவையான தகவல்களும் கிடைத்துள்ளன. கண்களிரண்டும் இல்லாத குருடர் ஒருவரும் கார் செலுத்த லைசென்ஸ் வைத்திருந்தாராம். தனது சின்னப் பையனை மடியில் இருத்திக் கொண்டு, பையன் வழிகாட்ட அந்தக் குருடர் நகரவீதிகளில் காரைச் செலுத்துவது வழக்கமாம். மற்றுமொரு டிரைவருக்கு கைகள் இல்லையாம். அவர் தனது காலொன்றை கையாகப்பாவித்து காரைச் செலுத்தி வந்தாராம்!— இவர்களது சாரதி லைசென்ஸைப் பொலிசார் இப்போது ரத்துச் செய்துள்ளனர்.

நமது இலங்கையிலும் இப்போது கார்ச்சாரதிகள் தொகை தினமும பெருகி வருகிறது. ஒவ்வொரு மாதமும் 1000 பேர்களுக்கு அதிகமானோர் கார்ச் சாரதி லைசென்சுகள் பெறுகிறார்கள்!— இவர்களில் எத்தனை பேர் கார்ச் சாரதி லைசென்ஸ் வைத்திருக்கத் தகுதியுள்ளவர்களோ?

..........ஆனல் காரோட்டும் காரிகையர்களுக்குப் பாராட்டு!

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வேறொரு கணக்கெடுப்பின் படி ஆண்களைக் காட்டிலும் பெண்களே சிறந்த டிரைவர்கள் எனத்தெரியவந்துள்ளது. காரைத் துப்புரவாக வைத்திருப்பதில், அடிக்கடி உள் யந்திரங்களை கழுவுவித்துக்கொள்வதில், தேவையாயான உப உறுப்புகளை பொருத்துவித்துக் கொள்வதில் பெண்கள்தாம் மிக அக்கறை காட்டுகிறார்களாம்.

தெருவில் காரைச் செலுத்தும்போது கவனமாகவும், சிக்னல் கொடுத்தும், பெண் சாதிகள் சுமாரான வேகத்திலேயே செல்கிறார்களென்பதால், கார்களைச் சிக்கனமாக வைத்திருப்பதில் ஆண்கள் பெண்களைப் பின்பற்றினல் நல்லது என பிரபல மோட்டார்கார் தயாரிப்புக் கம்பனி யொன்றின் தலைவர் கூறியுள்ளார்,

இப்போது அமெரிக்காவில் உள்ள கார்ச்சாரதிகளில் 25 வீதத்துக்குஅதிகமானோர் பெண்கள்தான்,





களனிநதி தீரத்திலே...... (8)

# மண் கோட்டையா? மதிற் கோட்டையா?

'ஈழத்துச் சோமு'

எகிப்து நாட்டு எழிலரசி, கிளியோபாட்ராவின் மயக்கு விழியில், தழுக்கு நடையில், மோகமொழியில் வெறிகொண்டு தன்னை மறந்து, தலைவன் ஜூலியஸ்சீசர் பணிந்துவிட உலகப் புகழ்பெற்ற உரோமசக்கராதிபத்தியமே தகர்ந்தது; அழிந்தது! அதுபோலஇளமையிலிருந்தே இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்த எங்கள் பாசத்தையறுக்க, ஒட்டுறவை உடைக்க — நடராசனுக்கும் எனக்கும் இடையில் தடைச்சுவராக ஒரு பெண்தான் விளங்கவேண்டுமோ? எங்கள் நட்பு என்ற கட்டிடச் சுவரில் வெடிப்பு ஏற்படுத்த—பருவக்கவர்ச்சி, பல்லிழிப்பு என்ற வேர்களைச் செலுத்தி ரேசலின் என்ற விஷவிருட்சம் தோன்றி விட்டதே என மனதார அவளை வைதேன்.

நடராசன் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டதும் முதலில் சிறிது வருத்தமாகத்தானிருந்தது. இளவயதிலிருந்தே கூடிவளர்ந்த பாசத்தைக் கூட கொஞ்சமும் நினைக்காமல் இடையில் வந்தவளுக்காக—அதுவும் யாரோ முன்பின் தெரியாதவளுக்காக—என்னை வெறுத்துக்கொண்டு போய்விட்டானே என நினைக்கும் தோறும் துன்பம் ஏற்படாமலில்லை. என் முற் கோபத்தால் நான் அவனைக் கை நீட்டி அடித்திருக்கவே படாது என என் மனம் குத்திக் காட்டிக்கொண்டிருந்தது. அதற்காக அவனின் கன்னத்தைத் தடவி நான் மன்னிப்புக் கேட்கவும் தயார்! ஆனால்..........?

என்னை வெறுத்துக்கொண்டு வீட்டை விட்டு மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிய நடராசன் வேறு எங்காவது தங்கியிருந்தால் நிட்சயம் நான் அவனைச் சமாதானப்படுத்தி திருப்பிக் கூட்டிவந்தே இருப்பேன். அவன் நேரே ரேசி வீட்டிற்குப்போய் அன்று முதல் அங்கேயே இருக்கையை வைத்துக் கொண்டுவிட்டான்! அவனின், திடீர் முடிவும், தடித்த துணிபும் எனக்கு வெறுப்பையளித்தன. அவனோ, அவளோ ஒரு தடவையாவது என் முன்பு தென்படுவதை நான் விரும்பவேயில்லை. நானுண்டு என் பண்பாடுண்டு என மனத்தையடக்கிக் கொண்டிருந்துவிட்டேன்.

பெரும்புயலடித்த பின் பயங்கரப்பேரமைதிநிலவுவது போல உள்ளம் இருந்தது. மன ஆறுதலுக்காக இலக்கிய ஆராய்வில் புலனைச் செலுத்த தொடங்கிவிட்டேன்.

* *

அம்மாவிடமிருந்து எனக்கொரு கடிதமும் புகைப்படமும் வந்திருந்தது. தங்கம்மாப்பாட்டி தனது மூத்த பேத்தியை எனக்கு கொடுக்க விரும்புவதாயும், சாதகம் பொருந்தியிருப்பதாயும், பெண் தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகவும், எனது சம்மதம் தெரிவிக்கும்படி அம்மா எழுதியிருந்தா!

தங்கம்மா பாட்டியின் மூத்த பேத்தி யார்?—தங்கம்மாப்பாட்டிக்கு சின்னத்தம்பி என ஒரே ஒரு மகனுண்டு: அவர் பலகாலமாக கம்பளையிலுள்ள தோட்டப்பாடசாலையொன்றில் சட்டம்பியாராக பணியாற்றி வருகிருர். அவருக்குப்பிறந்த குழந்தைகள் இரண்டும் பெண்கள். இளைய குழந்தையை தான் வளர்க்கப்போவதாக தங்கம்மாப்பாட்டி அடம் பிடித்து, தன்னுடன் வைத்துக்கொண்டிருக்கிரு. அவள் தான் லீலா. மூத்த மகளை கண்டியிலுள்ள கொன்வென்ட் ஒன்றில் படிக்க வைத்துவிட்டு சின்னத்தம்பி தம்பதிகள் வருடம் ஒரு தடவை ஊர்வந்துகொண்டு கம்பளையிலேயே இருந்தார்கள். மூத்த மகளுக்கு வயது வந்துவிட்டபடியால் படிப்பை நிறுத்திவிட்டு ஊருக்கு அனுப்பியிருந்தார்கள்—நான் சுகவீனமாக ஊரிலிருந்தபோது இந்தத் தகவல்களையெல்லாம் அம்மாமூலமும், லீலாவிடமும் தெரிந்துகொண்டேன்.

அம்மா அனுப்பிய புகைப்படத்தை மீண்டும் திருப்பித்திருப்பிப் பார்த்தேன். ஜம்மென்று எடுப்பாக, கவர்ச்சியாக அவள் இருந்தாள். கிடுகுத்தட்டிக்கூடாகப் பார்த்த அதே விழிகளிலிருந்த குறும்பும், நாணமும் புகைப்படத்திலும் அப்படியேயிருந்தன! —புகைப்படத்தின் அடியிலே 'கமலா' என அழகாக எழுதப்பட்டிருந்தது. புகைப்படத்தைப் பார்த்த மட்டில் அவளை எனக்குப் பிடித்துக்கொண்டுவிட்டது!

'க... ம ...லா......!'—என்னை மறந்து அந்தப் பெயரை உச்சரித்தேன்!

கலியாணத்தை முடித்துக் கொண்டு விட்டால் மனம் கண்ட திசைகளில் எல்லாம் அலையாமலிருக்கும், அம்மாவுக்கும் பெண் பிடித்திருப்பதால் பிற்காலத்தில் அவவுக்கும் ஒத்தாசையாக வருபவள் இருப்பாள்என என் உள் மனம் சம்மதித்தது.

ஒரு சந்தேகம் உள்ளத்தின் அடியில் எங்கிருந்தோ குரல் கொடுத்தது! "உனக்கு அவளைப் பிடித்துக்கொண்டு விட்டது. அவளுக்கும் உன்னைப் பிடிக்க வேண்டுமே?"

மனத்திரையில் லீலா கொண்டுவந்து தந்த ரோசாப்பூச் சம்பவம் பளிச்சிட்டது. "அக்கா உங்களிட்டை குடுக்கச் சொல்லி ஆய்ஞ்சு தந்தவ!"

அப்படியானல் கமலா ஏற்கனவே என்னை விரும்புகிருளா?

மிக நன்ருக யோசித்து எனது முடிவை அம்மாவுக்கு அறிவிக்க வேண்டுமென எண்ணிக்கொண்டிருந்த நாளில்——

நான் வேலை பார்க்குமிடத்தில் என் புலனை ஈர்த்துவிட்ட வேருெருசம்பவம் தயாராகிக் கொண்டிருந்தது!

அரசாங்கத்தின் வன்முறைகளைக் கண்டித்தும், தொழிலாளர்களுக்கு போதிய சம்பளமும், உரிமைகளும் வழங்கும்படி தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தின. ஆட்சியாளர் பணிய மறுக்கவே, பொது வேலை நிறுத்தத்துக்கான ஏற்பாடு சுறுசுறுப்பாக நடைபெற்றது.

1958 மார்ச் மாதம் நடுப்பகுதியில் கொழும்பில் மட்டுல்ல; நாடெங்கணும் பொது வேலை நிறுத்த ஏற்பாட்டுக் கூட்டங்கள் நடந்தன. உரிமை முழக்கங்கள் கேட்டன. தலைநகரில் கோல் பேஸ் தொடக்கம் மருதானையூடாக கொம்பனித்தெரு ஹைட்பார்க் வரை மிகப்பிரமாண்டமான தொழிலாளர் அணிவகுப்பு வரலாறுகாணுத வகையில் நடந்தது. அதில் கையில் செங்கொடி ஏந்தி, வாயில் உரிமைச் சுலோகங்களை கோஷித்தவண்ணம்—இன, மொழி, மத, அந்தஸ்த்து பேதம் மறந்து உழைப்பவர்கள் என்ற வர்க்க போகத்தை மட்டும் கடைப்பிடித்து துறைமுகத் தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் அனைவரும் அணிவகுத்துச் சென்ற காட்சி என்னைமெய் மறக்கச் செய்து விட்டது.

கல்லூரி நாட்களிலும் பிறகும் ஊரில் இளைஞர் இயக்கம், சமூகசேவா சங்கம் முதலியவற்றில் நாட்டமும் ஈடுபாடும் கொண்டிருந்த என்னைத் தொழிற்சங்க இயக்கம் வெகுவாகக் கவர்ந்து விட்டதில் வியப்பில்லை

வேலை' நிறுத்தம் ஆரம்பிக்க வேண்டிய நாள் பிரகடனப் படுத்தப்பட்டது. அதற்கு முன்பே எனது ஆர்வத்தையும் துடிதுடிப்பையும் கவனித்த தொழிற்சங்கநிர்வாகிகள், என்னை வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக சாதிக்க வேண்டிய மத்தியகுழுவில் நியமித்து விட்டனர். வேலை நிறுத்த தினத்தன்று பல்லாயிரம் தொழிலாளர்கள் —மற்றும் ஊழியர்கள் கந்தோர்களை வேலைத்தளங்களைப் பகிஸ்கரித்து வெளியே நின்ருர்கள்.

அந்தப் பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க குண்டர்கள், கருங்காலிகள் செய்த சில முயற்சிகளைக் கண்டிப்பதற்காக அன்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும் போது—

பின்னுக்கிருந்து திடீரென யாரோ என் பிடரியில்...

"ஐயோ! அம்மா...ஆ!"

சித்தங்கலங்கி மயங்கி நான் நிலத்தில் சாய்ந்து விட்டேன்! பிறகு கண் விழித்த பொழுது மருத்துவமனையிலிருந்தேன். "அண்ணை! இப்போது எப்படியிருக்கிறது?" கண்ணீர் சொட்டச் சொட்ட, முகம் வெளுத்து, பதறிக்கொண்டு—எனது நெஞ்சைத் தடவிஆசுவாசப் படுத்திக் கொண்டு நடராசன் பக்கத்தில் நின்று கேட்டான்! —மூன்று மாத இடைவெளிக்குப் பின் நடா இப்போது மருத்துவ மனையில் தான் என்னைச் சந்தித்தான்! சுகவீனமான வேளையில் அல்லது துக்கமான நேரத்தில் பரிவுள்ள உறவினரைக் கண்டால் உரிமைக் கண்ணீர் பொத்துக்கொண்டு வருமே—தன்னந்தனியாக கொழும்பில் காயம் பட்டிருந்த வேளையில் நடாவைக் கண்டதும் எனது கண்களிலும் நீர்த்துளிர்த்துவிட்டது: இத்தனை நாட்களுக்குப் பிறகாவது கோபத்தை மறந்து இப்போது ஓடோடி வந்தானே என அறிந்தபோது எனக்கு உள்ளூர மகிழ்வாகவே இருந்தது:

(வளரும்)

# திரை மறைவில்

### எஸ். ஜே. வி.

இம்மாத இறுதியில் கட்டாயமாக இலங்கை திரும்பி விடப் போவதாகத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தன்னுடைய வீட்டிலுள்ளவர்கட்கு எழுதியிருக்கின்ருராம். சத்திர சிகிச்சையின் பின் உடல் நலம் ஓரளவு தேறியிருப்பதாகவும் அவர் அறிவித்திருக்கின்ருராம்

### தேசிய கடன்!

"தேசிய கடனைப் பற்றி எம்முடைய அரசாங்கம் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்ருர் ஒரு பேச்சாளர். "நாங்கள் அதை அடுத்த சந்ததியினருக்கு விட்டுச் செல்லலாம். அடுத்த சந்ததியினர் விருப்பமென்ருல் அக்கடனைக் கொடுக்காமல் விடட்டுமேன்"

### கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதா?

மதிப்புக்குரிய தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சில கட்டுப்பாட்டின் கீழ் தான் பிரிட்டனுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகப் 'பிரதமர் பதவியை ஏற்றது தான்விட்ட பெரும் பிழை' தகநாயக்கா பாராளுமன்றத்தில் சொன்னர். இலங்கை நிலைமை பற்றிப் பத்திரிகை நிருபர்கட்குப் பேட்டியளிக்கலாகாது என்பதே அக்கட்டுப்பாடு என்றும் காலிப்பிரதிநிதி கூறினர். பத்திரிகைகட்குப் பேட்டியளிக்க வேண்டாமென்று தாங்கள் திரு. எஸ். ஜே. வி. யைக் கேட்டுக்கொண்டதேயல்லாமல் கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லையென்று சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா பதிலளித்தார்.

### அனுபவ மொழி.

"எதிரிகளை நேசிப்பதை விடுத்து உன்னுடைய நண்பர்களைக் கொஞ்சமாவது நல்லாக நடத்து"

— அனுபவ மொழி.

### சிறந்த பேட்டி இதுதான்!

திரு. எஸ். ஜே. வி. பிரிட்டனுக்குப் போகுமுன் பாராளுமன்ற வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்ட செய்தியிது:— பிரிட்டனில் பத்திரிகை நிருபர்கட்குப் பேட்டியளிக்கலாகாது என்ற கோரிக்கையைப் பற்றித் திரு. எஸ். ஜே. வி. யிடம் ஒருவர் கேட்டாராம். "பத்திரிகை நிருபர்கட்குப் பேட்டியளிக்காமல் என்னைத் தடுத்திருக்கிருர்கள் என்பதை விடச் சிறந்த பேட்டி வேறேதும் உண்டா?" என்று சொல்லிச் சிரித்தாராம் எஸ். ஜே. வி.

### திறந்தவை மூடின!

திறந்த மனது உள்ளவர்கள் இன்று குறைவாக இருப்பதற்குக் காரணம் பழுதுபார்ப்பதற்காகத் திறந்த மனதுகள்யாவும் மூடப்பட்டிருப்பதே

### அவருக்குத் தெரியாதாம்!

சில தினங்கட்கு முன்பு குளுக்கோஸ் சத்தியாக்கிரகி ராசரத்தினக் கோனரின் மனைவியைச் சந்தித்தேன். ராசரத்தின என்ன செய்யப் போகிருர் என வினவினேன். "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று கையைவிரித்துக் காட்டிவிட்டுச் சென்று விட்டார் அவர்.

### விலை உயர்வுத் தொல்லை!

ஒரு அரசியல் வாதி பேசினர்:—"நாடு கெட்டுக் குட்டிச் சுவராகிக் கொண்டே போகின்றது! அன்று ஒரு சதத்திற்கு எவ்வளவு பொருட்களை வாங்கலாம். இன்று ஒரு சதத்திற்கு இரண்டு அரைச் சதங்களைக் கூட வாங்க முடிகிறதில்லையே!"

### மனமுடைந்து விட்டார்!

சனப்பிரதிநிதிகள் சபையில் பேசும்போது சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. ஆசீர்வாதம் என்ற புரக்கிராசியார் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சம்பவத்தைத் காலிப்பிரதிநிதி திரு. டபிள்யூ. தகநாயக்கா குறிப்பிட்டாரல்லவா? தான் இனிமேல் வழக்கறிஞர் தொழிலை நடத்தப் போவதில்லையென்றும் இந்நாட்டை விட்டு வெளியேறப் போவதாகவும் அவர் எனது நண்பர் ஒருவரிடம் கூறியுள்ளதாக அறிகின்றேன்.

### முன்னேற மூன்று வழிகள்.

மனிதன் முன்னேறுவதற்கு மூன்றே மூன்று வழிகள்தானுள்ளன. கஷ்டப்பட்டு உழைத்தல், களவு, இலஞ்சம், கொள்ளை ஆகிய வழிகளைக் கடைப்பிடித்தல்; அரசியலில் இறங்குதல்.

### சேர்ந்து குழிபறி.

ஒரு கட்சியை எதிர்த்து நின்று தோற்கடிக்க முடியாதென்ருல், அக்கட்சியின் நண்பனகச் சேர்ந்து நின்று கொண்டு குழிபறி:—

கம்யூனிஸ்ட் விவேக சிந்தாமணி.

### தமிழரசுத் தலைவர்கள்.

சென்ற வாரம் பாராளுமன்றத்தில் பேசும்போது "தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வெகு விரைவில் மறுபடியும் எங்களுடன் சேர்ந்து கடமையாற்றுவார்கள்" என்று சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா குறிப்பிட்டார். செனட் சபைத் தேர்தலுக்கு முன்பு தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யயப்படுவார்கள் என்ற பேச்சு இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிபடுகின்றது. அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலிலிருக்கும்.

### தங்கள் திறமை வீணுகலாமா?

நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ். ஆர். டயஸ்—பண்டாரநாயக்கா அவர்கட்கு! வணக்கம். இலங்கை அரசியலை சீர் செய்து, தங்களின் தாராள மனப்பான்மையால் மொழிப்பிரச்சினையைத் தீர்த்து, நிதி நெருக்கடியைய் தவிர்த்து, இலங்கை மக்களை மகிழ்ச்சிக் கடலிலாழ்த்திய தாங்கள் உலகப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றமை மிகவும் நியாயமானதே! வாழ்க தங்களின் திறமை!

இப்படிக்கு
உண்மை விளம்பி

—அம்பலத்துறைவோன்—

## 'கொல்' லென்று சிரிக்காதீர்!

அமெரிக்காவில் ஜனதிபதியாக இருந்த பிராங்க்ளின் டி. ரூஸ் வெல்ட் என்பவர், மனிதர்களின் மன இயல்பை அறிந்து கொள்வதற்காக ஒரு யுக்தியைக் கடைப்பிடித்து வந்தாராம்.

அவர் காரியாலயத்திற்குப் போகும் பொழுது, வழியில் ஓர் அறையில் அவரைப் பேட்டி காணுவதற்காகாக ஏராளமானேர் வந்து கூடியிருப்பார்கள். அந்தக் கூட்டத்தின் நடுவே நின்றுகொண்டு, அந்த ஜனங்களுடன் ஏதாவது தமாஷ் கதையைப் பேசி, அவர்களைச் சிரிக்கவைப்பார். ஜனதிபதி சொன்ன விகடக் கதையைக் கேட்ட சிலர் 'கொல்' லென்று வாய் விட்டுச் சிரிப்பார்கள். வேறு சிலர் மரியாதையாகப் புன்முறுவல் செய்வார்கள்.

இந்த இரண்டு கோஷ்டியினரையும் நன்ருக உற்றுக் கவனிக்கும் ஜனதிபதி, அவர்களை நன்ருக மனதில் பதித்து ஞாபகப் படுத்திக் கொள்வார். இந்த இரண்டு கோஷ்டியினரிடையிலும் உள்ள வித்தியாசத்தைப் பற்றி ஒரு சமயம் தன்நண்பர் ஒருவருக்குக் குறிப்பிடும்பொழுது, "கொல்லென்று சிரிப்பவர்கள் 'காக்காய்' பிடித்து, என்னைக் கைக்குள் போட்டுக் கொள்வதற்காக இங்கு வந்திருக்கிருர்கள். மற்றவர்கள் தான் உண்மையான காரியமாய் வந்தவர்கள். அவர்களைத் தான் முதலில் கவனிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிருர்.

## நீதிபதிக்கு முன்னுல்:

### 'சீதனம் வேண்டாம்'!

வழக்கறிஞர் வாய் திறக்கு முன்பு "எதிரி மனுதாரரை ஏசி அடித்துப் பயமுறுத்தியதாகத் தான் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கும் சீதனப் பணத்திற்கும் என்ன தொடர்பு" என்று வினவினுர் நீதிபதி.

தங்கம்மாவின் வழக்கறிஞர்:- சீதனப் பணம் கொடுப்பதாக வாக்குறுதியளித்துக் கலியாணத்தைச்செய்து வைத்துவிட்டுப் பின்பு ஏமாற்றியதன் விளைவாகத்தான் நாங்கள் அவர்களை ஏசினேம். அடித்துப் பயமுறுத்தியதாக கூறியது பொய் ஐயா!

செல்லம்மாவின் வழக்கறிஞர்:- அவர்களுக்கு நாங்கள் எந்தச் சீதனப் பணமும் கொடுக்கத் தேவையில்லை. பேசியதெல்லாம் கலியாணத்திற்கு முன்பே கொடுத்தாகி விட்டது. சீதனத்தைச் செலவழித்து விட்டு இப்போது மறுபடியும் பணம் வாங்கி வருமாறு எமது மகளைத் துன்புறுத்துகிருர்கள் ஐயா!

செல்லம்மாதான் வழக்கைத் தொடர்ந்திருந்தார். செல்லம்மாவின் மகள் மரகதத்தைத் தங்கம்மாவின் மகன் கந்தையாவிற்குத் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் முடித்து ஒருமாத காலத்திற்குள்ளேயே தம்பதிகளின் தாய்மார்கட்கிடையில் பிச்சுப் பிடுங்கல்கள் ஆரம்பமாகின. விளைவு? மரகதம் தன் தாய்வீட்டிற்கும் கந்தையா தன்னுடைய தாயின் வீட்டிற்கும் சென்று விட்டார்கள்.

நீதிபதி:- சீதனத்தைப் பற்றி நானென்றும் செய்யமுடியாது. சில ஆயிரம் ரூபாவிற்காக இந்த இளம் தம்பதிகளின் வாழ்க்கையைப் பாழாக்கப் போகிறீர்கள். (கந்தையாவைப் பார்த்து) நீ உன்னுடைய மனைவியை அழைத்துக் கொண்டுபோய்த் தனி வீட்டில் வேருக வசிக்க விரும்புகிருயா?

கந்தையா: ஆம் ஐயா!

நீதிபதி:- (மரகதத்தைப் பார்த்து) நீ அதற்கு இணங்குவாயா?

மரகதம்:- ஆம்!

நீதிபதி:- சரி நீங்கள் இருவரும் இறங்கிப் போங்கள்.

(தாய்மாரைப் பார்த்து) இனிமேல் அவர்களின் வாழ்க்கையில் தலையிட்டீர்களோ இருவரையுமே சிறைக்கனுப்பி விடுவேன். போய்த் தொலையுங்கள்.

# பிரசவத்துக்குப் பின்பு அழகு கூடுவது ஏன்?

## பெண்களே உடலைப் பேணுங்கள்!

“குமர் முற்றினல் குரங்கு” என்று சொல்லுவார்கள். பெண்கள் பருவமடைந்த பின்னர், வாலிபப் பிராயத்தில் அழகாகத் தோற்றமளிக்கிருர்கள். ஆனல், ஒரு குறித்த காலத்துக்குள் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கவில்லையானல், சிலபெண்கள் தங்கள் அழகை இழந்துவிடுகிருர்கள்!

இன்னும் சில பெண்கள் தங்கள் வாலிபப்பிராயத்தில் அழகற்றவர்களாக இருந்தாலும், திருமணத்தின்பின் முதற்பிரசவமான பிறகு அவர்கள் தலைமயிர் நீண்டுவளர்ந்து முன்னை விட அழகாகக் காட்சியளிக்கிருர்கள். இது ஏன் என்று தெரியுமா?

பிரசவம் என்பது ஓர் இயற்கையான நிகழ்ச்சி. பிரசவத்துக்கு முன்பு இருந்ததை விடப் பின்பு பெரும்பாலோருக்கு அழகு மிகும். கர்ப்ப காலத்தில்-முக்கியமாய், உடல் அதற்கு முன் இருந்ததைவிட மிக ஆரோக்கியமாக இருக்கும். உடலில் ‘அகச் சுரப்பிகள், என்று ஒருவகை உறுப்புக்கள் அமைந்திருக்கின்றன. கரு உற்பத்தியாகும் உறுப்பிலிருந்தும் பலவகைச் சுரப்புக்கள் இரத்தத்தில் கலக்கின்றன. இவை மிகுந்த ஆற்றல் பெற்றவை. பெண்கள் விஷயத்தில் இந்தச் சுரப்புக்கள் பல வகையிலும், பல அளவிலும் மாறுதல் அடைந்துகொண்டிருக்கின்றன. ஆண், பெண் என்ற வித்தியாசத்தையும்; வீரம், தைரியம், துணிச்சல், சாந்தம் முதலிய குணங்களையும் இந்தச் சுரப்பிகளே உண்டாக்குகின்றன.

பெண்களுடைய உருவத்திற்கும் உடலமைப்பிற்கும், மாதவிடாய்த் தோற்றத்திற்கும், கருத்தரித்து வளர்வதற்கும், அதற்காக வேண்டிய உணவுச் சத்துக்களைத் தெரிவுசெய்து, ரத்தத்தில் கலந்து, வளரும் கருவுக்குக் கொடுக்கவும் இந்தச் சுரப்பிகளே மூலகாரணமாகின்றன. தைராயிட் கிரந்தி, பிச்யூட்டரி கிரந்தி, கருக்கிரந்தி ஆகியவை இதில் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன. இவை கர்ப்ப காலத்தில் மேம்பட்டு விளங்குவதால், தாயின் உடல் அதிக அழகும் ஆரோக்கியமும் பெறுகின்றது.

தக்க போஷாக்கு அளித்தால் பிரசவமான பின்னரும் இந்தச் சுரப்பிகள் ஊக்கம் பெற்று வேலைசெய்யும். ஆனல் இத்தகைய ஆரோக்கியம் குழந்தைகளைப் பெறுங் காலங்களில் ஏற்படவேண்டுமானல். சிறு வயதிலும் பெண்களை நன்ருய்ப்பேணவேண்டும். நவீன நாகரிகத்தால் இளம் பெண்களுடைய ஆரோக்கியம் உடல் உழைப்பில்லாமல் குறைந்து போகின்றது. இதனல் இவர்கள் இரண்டொரு பிரசவமாவதற்கு முன்பே பலவீனமடைந்து நோய்க்குள்ளாகிருர்கள்! எனவே வாலைப் பருவத்தில் வனப்புடன் காட்சி தரும் பெண்கள், பிரசவத்திற்குப் பின்னும் அழகோடு திகழவேண்டுமானல் தங்கள் உடலைப் பேண வேண்டியது அத்தியாவசியம்.

## தேவை!

தேவைகள் கேட்கின் சிலவல பலப்பல
ஏழைகளுக்கு இல்லம் தேவை
இல்லாளுக்கு இனிப்பல தேவைகள்
நல்லவை கெட்டவை நாடுதல் தேவை
நாடுவோருக்கு நயம்பல தேவை
ஆசிரியர்க்கு அறிவுநூல் தேவை்
மாணவருக்கு “மார்க்”குகள் தேவை
எழுத்தாளர்க்கு ‘இங்’குடன் பேப்பர்
காகித உறைகள் கணக்கில தேவை
பிரபல மடையப் பேப்பரின் வால்களை
பந்தம் பிடித்துப் பழகுதல் தேவை
அறிமுகப் படுத்தவோர் ஆளும் தேவை
ஆசாமிக்கு ஆறுடன் இரண்டு
மூன்றைக் கொடுத்தால் முற்றிலும் பலிக்கும்
வாலைப் பிடிப்பதில் காலைப் பிடித்தல்
இன்றைய தேவை இலக்கிய உலகிலே
சர்ச்சைகள் அனர்த்தம் சண்டைகள் கணக்கில
முன்னே போவதும் பின்னே வருவதும்
இதிலுமோர் போட்டி இடைஞ்சலிற்பட்டவன்
முன்னே பின்னே மூலமோ நீளமோ
வெளிவரலொன்றே வேண்டுவது கண்டீர்
ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே
சொன்னவன் பழையவன் துலக்குவோர் புதியர்
எனைவானலும் இதன்கருத் தொன்றே
இவைகளில் உணர்ந்து இருப்பதில் அமைதியும்
பகைகள் நீங்கலும் பாரிலே தேவை
தேவை பெரியது சேவை பெரியது
தேவை தேவை சேவைதான் தேவையே,

— திமிலை, மகாலிங்கம்.


உயர்ந்த டிசைன்களில்
உத்தரவாதமான
**பவுண் தங்க வைர நகைகளுக்குச்**
சிறந்த இடம்,
மங்கையர் மனதை
மகிழ்ச்சில் ஆழ்த்தி
மனதைக் கொள்ளை
கொள்வது
★ **வினஸ் நகைகளே!**
ஒருமுறை
விஜயம் செய்யுங்கள்.
வினஸ் தங்க மாளிகை
78, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.



**சேலம்**
S. V. R. கண்டர் R. I. M. P.
அவர்கள் தயாரிக்கும்
**வீரிய விர்த்தி மாத்திரை**
மிதமிஞ்சிய உஷ்ணத்தினலும், அமிதபோகத்தினலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
**24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00**
**லேபனம் மெழுகு**
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகிய வைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
**1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00**
தேவைக்கு எழுதவும்:
**கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்**
*Prop:* S. M. R. M S
ராகலை பஜார், ஆள்க்கருனை.
(சிலோன்) (P. O.)


## தெரிந்ததா?

எம். வேலு, அட்டபாகை.
கே:- பாடலாசிரியர் டி. கே. சந்தானம், படங்களில் நடித்துமிருக்கிருரா?
ப:- பின்னே, இல்லையா?... கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, முதல்தேதி, கோமதியின் காதலன், மணமகன் தேவை, அம்பிகாபதி, எங்கள் குடும்பம் பெரிசு... இந்தப்படங்கள் எல்லாம் அவர் நடித்த பழைய படங்களாயிற்றே!

பி. அழகம்மா,
பொகந்தலாவ.
கே:- அம்மை குத்தும் முறையைக் கண்டு பிடித்தவர் யார்?
ப:- டாக்டர், எட்வர்ட் ஜென்னர் என்பவர் கண்டு பிடித்தார்!

எஸ். சொக்கநாதன்,
சண்டிலிப்பாய்.
கே:- சில எழுத்தாளர்கள்—அதுவும் எங்கள் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், சில புகழ் பெற்ற எழுத்தாளர்களைத் தாக்குகிருர்களே, இதற்குக் காரணம் என்ன?
ப:- பாதையில் கிடக்கும் வாழைப்பழத் தோலில் தெரியாமல் காலைவைத்து விட்டுச் சறுக்கி விழுந்தவன், அதை உற்று நோக்குகிருன். இது ஏனென்று புரிந்தால், உங்கள் கேள்விக்கு விடையும் கட்டாயம் புரியும்!

வி. பாலச்சந்திரன், பதுளை.
கே:- நான் கேட்கும் இந்தக் கேள்விக்குப் படாரென்று பதில் சொல்லுங்கள் பார்ப்போம்?
ப:- படார்!
கே:- தந்தையும் மகனும் எழுத்தாளர்களாக இருக்க முடியுமா?
ப:- ஏன் முடியாது? மேல்நாட்டில் டூமாஸ் என்ற ஒரு எழுத்தாளன் இருந்தான். அவன் மகன் அவனைவிடப் பெரிய எழுத்தாளன்! நம் இலங்கையிலும், “நாங்களும் இருக்கிருேம், டூமாஸின் அவதாரங்கள்” என்று சிலர் சொல்லிக்கொள்கிருர்கள். ஆனல் அத்தனையும் ‘டூப்ஸ்!’

ந. கந்தையா, பருத்தித்துறை
கே:- நமது உடலில் வியர்வையே இல்லாத உறுப்பு எது?
ப:- உதடு!

செல்வி. வேதவனம்,
கொழும்பு.
கே:- நம் இலங்கையில் நல்ல மூளைக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதா?
ப:- கசிப்பைத் தயாரித்தே நம் இலங்கையர்கள் காசைச் சம்பாதிக்கிருர்களே; அதற்கு நல்ல மூளை வேண்டாமா?

எம். ஜோஸப், கண்டி.
கே:- குருடனுடைய உலகம் எப்படிப்பட்டது?
ப:- பொருமைப்பார்வை இல்லாத உலகம் அது!

கே. செல்லப்பாண்டியன்,
தூத்துக்குடி.
கே:- அமெரிக்காவில் தீண்டாமை இருக்கிறதா?
ப:- பணத்தையும் நிறத்தையும் அடிப்படையாகக் கொண்ட பயங்கரமான ‘தீண்டாமை’ அங்கேயும் இருக்கத்தான் செய்கிறது!

எல். ராஜூ,
சுருளிப்பட்டாணி, மலாயா.
‘புதின’த்தைப் போன்ற வேறு பத்திரிகைகளும் இலங்கையிலிருந்து வெளி வருகின்றனவா?

இலங்கையிலிருந்து மட்டுமல்ல, தமிழிலேயே புதினத்தைப் போன்று சுவையான செய்திகளுக்காக மட்டும் வெளி வரும் பத்திரிகை வேறு எதுவுமில்லை!

ப. கந்தசாமி, மருதானை.
கே:- நேரு குண்டுக்குப் பயப்படுவாரா?
ப:- இல்லை. அவருக்குத் தம் உயிரைப்பற்றிப் பயமே இல்லை. யுத்தத்தைக் கண்டுதான் அவர் பயப்படுகிருர்!

வே. பொன்னம்பலம்,
சுன்னுகம்.
கே.- என் வயிற்றில் இடது புறத்தில் எப்பொழுதும் ஒரு வித வலி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. இதற்கு என்ன செய்யவேண்டும்?
ப:- முதலில் ஒரு நல்ல டாக்டரைப் போய்ப் பார்க்கவேண்டும்! - இதையெல்லாம் பத்திரிகையாளரிடம் கேட்பதும், அவர்கள் வைத்தியம் சொல்வதும் இப்போது ஒரு வியாதியாகிவிட்டது!

செல்வி. ரலியா தாஹிர்,
கொழும்பு. 9.
கே:- “காதல், காதல், காதல்! காதல் போயிற் காதல் போயிற் சாதல், சாதல், சாதல்!” என்ற பாரதியாரின் பிரசித்திபெற்ற பாடல் அவருடை எந்த நூலில் வருகிறது?
ப:- பாரதியாரின் ‘குயில்’ என்னும் சிறு காவியத்தில் வருகிறது!.

பி. விஸ்வநாதன், கலஹா.
கே:- உங்கள் நண்பரின் பிணத்தைப் புதைத்திருக்கும் இடத்திற்கு நீங்கள் தனியாகப் போனல் பயப்படுவீர்களா?
ப:- புதைத்த இடத்தில் நண்பர் இருப்பதில்லை, பிணம்தான் இருக்கும், காலம் கடந்து விட்டால் வெறும் புழுக்கள் தான் இருக்கும். பயம் எதற்கு?
கே:- பட்டணத்துக் கட்டழகிகளுக்கும், கிராமத்துக் குமரிகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன?
ப:- முன்னது பட்டம் வெட்டிய பளிங்கு. பின்னது பட்டம் வெட்டாத அசல் வைரம்!

## கல்லூரி மாணவிமீது

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

கள், வியாபாரம், யாத்திரை, கல்வி, போன்ற காரணங்களுக்காக அடிக்கடி சென்னைக்குப் போவதுண்டு. இங்குள்ள மாணவ, மாணவிகளில் அநேகர் சென்னை மற்றும் தமிழ் நாட்டு நகரங்களிலுள்ள கலாசாலைகளில் படித்து வருகின்றார்கள். இந்த மாணவ மாணவிகள் பிரயாணக்களைப்பால் அல்லது புகைவண்டிச் சுணக்கம் முதலிய காரணங்களால் சில வேளைகளில் சென்னை நகரத்தில் தங்கிச் செல்வது வழக்கம். சேய்நாடு—தாய்நாடு என்ற உறவும் கலாச்சாரம்—மொழி ஆகியவற்றில் நெருங்கிய தொடர்புமிருந்தால் இவ்வளவு காலமும் அங்கு பயிலும் மாணவர் மாணவிகளைப் பற்றியொன்றும் இங்குள்ள பெற்றோர்கள் கவலைப்பட்டது கிடையாது. இங்குள்ள பெற்றோர்—அதிலும் சென்னையில் தங்கள் பெண்பிள்ளைகளைப் படிக்க விட்டிருக்கிற பெற்றோர் இனி நிச்சயம் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல அஞ்சலாய்ப்பர். அங்கு பயிலும் நமது மாணவர் மாணவிகளும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என இங்குள்ள பிரமுகர் ஒருவர் மேற்படி செய்தி பற்றி அபிப்பிராயம் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

## இரட்டைக் குழந்தைகள்

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

நாடுகளின் வெப்ப தட்பத்துக்கமைய இந்த அதிசயப் பிரசவங்களும் ஏற்ற இறக்கமாக இருக்கின்றன.

அமெரிக்க நீக்கிரோப் பெண்கள்தான் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவிப்பதில் உலகத்தில் முதல்ஸ்தானம்வகிக்கிறார்கள்! ஆனால்ஜப்பான்பெண்கள்இதற்கு எதிர்மாறாக குறைவாயுள்ளனர். அங்கு சாதாரண 10,000 பிரசவங்களில் 33 மட்டுமே இரட்டைக் குழந்தைப் பிரசவங்களாக இருக்கின்றன. இன்று 44 அமெரிக்கர்களில் ஒருவர், "இரட்டையர்களில்" ஒருவராக இருப்பார்! சாதாரண 86 பிரசவங்களுக்கு ஒன்று இரட்டைப் பிரசவமாக அங்கு நிகழ்கின்றது.

கடும் குளிர் நிலவும் நாடுகளில் மிக அதிகமாகவும் உஷ்ணமான நாடுகளில் மிகவும் குறைவாகவும் இரட்டைக் குழந்தைப் பிரசவங்கள் நிகழ்கின்றன.

# இப்படிச் சொன்னார்கள்!

### வீட்டுக்குள் புகுந்து பலாத்காரம்:

"12—6—61 மாலை ஆறுமணியளவில் நான் ஆட்டைத் தேடிப் போனேன். அச்சமயம் எதிரிகள் இருவரும் வழியில் என்னைக் கண்டு, 'எங்கே போகிறாய்?' என்று கேட்டனர். ஆட்டைக்காணுதபடியால் தேடிப்பார்க்கப் போவதாகக் கூறினேன். எதிரிகள் என்னை வீட்டுக்குப் போகும்படியும், தாங்கள் ஆட்டைப் பிடித்துக் கொண்டுவருவதாகவும் கூறினர். நான் வீட்டுக்குச் சென்ற சிறிது நேரத்தில் முதலாவது எதிரி திடீரென என் வீட்டுக்குள் புகுந்து என்னைக் கையில் பிடித்து இழுத்துத் தொந்தரவு செய்தார். இரண்டாவது எதிரியும் உடனே அங்கு வந்து இருவருமாகச் சேர்ந்து என்னைத் தரையில் கிடத்திப் பலாத்காரம் செய்ய எத்தனித்தனர். நான் கூக்குரல் போட்டதும் எதிரிகள் ஓட்டம் பிடித்தனர். இதன் பிறகுதான் அடுத்த வீட்டுக்காரரான முனியாண்டியிடம் ஓடிப்போய் முறையிட்டேன்"

—அலிமகள் ரகுமத் பிபி.

(பலாத்கார வழக்கில் அளித்த வாக்குமூலம்)

### ஏகபோக உரிமை ஆபத்து!

"அரசாங்கத்துடன் ஏனைய ஸ்தாபனங்களும் மாணவருக்குக் கல்வி போதிக்கும் கடமையைப் பொறுப்பேற்பது உகந்ததென்று பல நாடுகள் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளன. கல்வியில் எந்தவித மான ஏகபோக உரிமையும் ஆபத்தானது!"

—திரு. சி. ஜே. ஓர்லாப்

(யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற தலைமையாசிரியர் மகாநாட்டில்)

### "சம்பத்தையும் எதிர்ப்பேன்!"

"காமராஜர் நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறார். எனவே தமிழ் நாட்டில் மீண்டும் காமராஜர் ஆட்சி வரவேண்டும். இதற்காக எல்லாத் தொகுதிகளுக்கும் போய் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெறப் பாடுபடுவேன். என் அண்ணன் மகன் சம்பத் நிற்கும் தொகுதிக்கும் போவேன். சம்பத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வேன். இது உறுதி!"

—பெரியார் ஈ. வே. ரா

(கோவையில் நடந்த பொதுக்கூட்டத்தில்)

### துயரமும் மகிழ்ச்சியும்.

'நீங்கள் பழைய டில்லியில் திரும்பிவரும் வழியில் வெடிகுண்டு விபத்தொன்று ஏற்பட்டதைக் கேள்வியுற்றதும் நான் மிகுந்த துயரருக்குள்ளானேன். ஆனால் அவ்விபத்தில் உங்களுக்குக் காயம் ஏற்படவில்லை என்பதையும், நீங்கள் சுகமாக இருக்கிறீர்கள் என்பதையும் அறிய நான் பெரும் மகிழ்ச்சி யடைகிறேன்.'

—பிரதமர் ஸ்ரீமாவோ

(திரு நேருவுக்கு அனுப்பிய தந்திச் செய்தியில்)

### ஓட்டுப்படம்!

"பிரபல எழுத்தாளர்களினதும், சினிமா நட்சத்திரங்களினதும் படங்களுடன் மற்றவர்களின் படங்களை ஒட்டவைக்கும் தொழிலைச் சென்னையிலுள்ள சில படப்பிடிப்பு நிலையங்கள் நடத்துவதை நீரும் அறிந்து விட்டீரா? குழந்தைப் பத்திரிகைகள் நடத்துபவர்களின் சிறுபிள்ளைத் தனத்திற்கு அவைகளை விட்டுவிடும் தம்பி!"

—ஓட்டைவாயன்

(தினகரன் கேள்வி பதில்)

### உரிமைப்போராட்டம் வேண்டாம்!

"நமது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும் இவ்வேளையில் ஆசிரியரின் பொறுப்பு மகத்தானது. வெறும் உரிமைகளுக்காக மட்டும் போரடுவதை விடுத்து, தங்கள் கடமைகளைச் சிறந்த முறையில் ஆற்றவேண்டும்".

— திரு. எஸ். யூ. சோமசேகரம்

(வேலணை தமிழாசிரியர் சங்க ஆண்டு விழாவில்)

### உலக ராணி!

"பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களுக்கு முழு உலகத்தையுமே ஆட்சி புரியக்கூடிய ஆற்றலிருக்கிறது. கடந்த வருடம் அவர் முதலாவதாக அரசியலில் இறங்கியபோது ஒரு சிலர் அவர் தோல்வியடைவாரென்று கருதினர். ஆனால் அவருக்கு இந்த முழு உலகத்தையும் கூட ஆட்சி செய்ய முடியும்"

—கல்வி மந்திரி ஜனப். பதியுதீன் மஹ்மூத்

(பலமத்தலாவ பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில்)

### உங்கள் தாய்மொழி தமிழே!

"உங்களுடைய பாஷையான தமிழிலே என்னால் பேசமுடியாததையிட்டு வருந்துகிறேன். பாகிஸ்தான் மக்களுடன் உருதுப்பாஷையில் பேசுவதைப் போலவே, உங்களுடனும் கூடியவிரைவில் தமிழில் பேசுவேன்"

—ஈராக் ஸ்தானிகர்

(மாத்தறை முஸ்லீம்கள் வரவேற்புக் கூட்டத்தில்)

### "தாய் நாட்டில் பிறவாதே!"

"எனக்குப் பிறக்கும் குழந்தை லண்டனில் பிறக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்"

— மாஜி நடிகை பத்மினி

(பத்திரிகை நிருபர் பேட்டியில்)

### பல்லவி!

"இந்த நாட்டிலுள்ள இரண்டு பிரதான சமூகங்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சினைக்கு நிரந்தரமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வுகாண்பதற்கு, தனிப்பட்ட கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்வது சரிவராது. சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மாநாடொன்றைக் கூட்டும்படி பிரதமரையும் அரசாங்கத்தையும் வேண்டுகிறோம்"

— தமிழ் காங்கிரஸ் தீர்மானம்

## கண்டதும்... கேட்டதும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த அழகு சுந்தரிகளையெல்லாம் உதறித் தள்ளிப் போட்டு உன்ரை கழுத்திலே மூன்று முடிச்சுப் போட்டதுக்கு என் புத்தியை செருப்பாலை அடிக்கணும்-' இது சாம்பிளுக்கு ஒன்று.

### ஆங்கில மோகம் அளித்த பரிசு:

இன்னொரு விஷயத்தை இச் சந்தர்ப்பத்தில் கூறுவது அவசியமெனப்படுகின்றது. வெள்ளைக்காரன் நம்மை அடிமைப்படுத்தி ஆளத்தொடங்கிய காலந் தொட்டு இன்றுவரை பிள்ளைகளை ஆங்கிலம் கற்க பள்ளிக்கு அனுப்பிய பெற்றோர்கள் அப் பிள்ளைகளின் வருங்காலம் குறித்து கவலைப்பட்டுக்கொண்டே இருந்தார்கள்; இருக்கிறார்கள். "இந்தப் பிள்ளைகள் படித்துத்தான் என்னபண்ணப் போகுதுகள்? வருங்காலத்தில் உத்தியோகம் கிடைப்பது குதிரைக் கொம்புதான்" என்று அன்றும் சொன்னார்கள்; இன்றும் சொல்லுகிறார்கள். அன்று எங்கள் பாட்டன்மார் சொன்னதையே எங்கள் தகப்பன்மார் சொன்னார்கள். இன்று அதையே நீங்களும் நானும் சொல்லுகின்றோம்.

எங்களுடைய பாட்டன் காலத்தில் "யேஸ், நோ" சொல்லத் தெரிந்தவர்கள் கொம்பனிகளிலும் அரசாங்கத்திலும் உத்தியோகம் பார்த்து ஜமாய்த்தார்களாம்; அவர்கள் உத்தியோகம் பார்த்த லட்சணம் பற்றிக் கதைகதையாகக்கேள்விப்பட்டிருக்கிறேன். அதையெல்லாம் இங்கு எழுதுவதென்றால் 'எடிட்டர்' இடமில்லை என்று கையை விரித்துவிடுவார். உதாரணத்துக்கு ஒரு சிறுசம்பவத்தை மாத்திரம் சொல்லலாமென்று நினைக்கிறேன். ஒரு பெரிய உள்ளூர் உத்தியோகஸ்தர்ஒருநாள்ஆபீசுக்குப் போக அரைமணி "லேட்" ஆகிவிட்டது. அவருக்கு சுப்பீரியர் ஆபீசராக இருந்த வெள்ளைத்துரை அவரை "பூல்" என்று பேசிப் போட்டான். கறுத்தத் துரைக்கோ ஆத்திரம், பொத்துக்கொண்டு வந்துவிட்டது. அரைகுறை ஆங்கிலம் தெரிந்த அவர் வெள்ளைத் துரையைப் பார்த்து 'நீயா அல்லது நானு மடையன்' என்று கேட்க எண்ணினார். ஆனால் அவருடைய ஆங்கில அறிவு இடக்குப் பண்ணிற்று. கோபத்தில் பொறுமை இழந்தவராக "யூ பூல் ஐ பூல்" ( You fool I fool ) என்றாராம் பொறிப்பறக்க. பிறகு அவர் பேசியதில் ஏதோ பிழை இருப்பதாகத் தெரியவே அவர் மேசை மீதிருந்த பேப்பரில் ஒரு கேள்வி அடையாளத்தைப் போட்டுவிட்டுப் போனாராம்.—மாயாவி

Registered as a newpaper at the G. P. O.

புதினம்
சுவையான செய்திக் கிழமை இதழ்...
வரதர் வெளியீடு

# நோயாளர் திண்டாடுகையில் ஆஸ்பத்திரியாளர் கொண்டாட்டம்! இதுபற்றிப் பொதுமக்கள் சீற்றம்!

# ஆஸ்பத்திரியில் அலங்கோலம்!

மனிதாபிமானத்தோடும் இரக்க உணர்ச்சியுடனும் நோயாளிகளுக்குப் பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் தமதுகடமை நேரத்தில் ஒழுங்கற்ற நடத்தைகளில் ஈடுபடுவதன்மூலம் இன்று பொதுமக்களின் எரிச்சலுக்கும் திட்டுதலுக்கும் ஆளாகியுள்ளனர். இவர்களுக்கெதிராகப் பொதுமக்களின் பெருத்த கண்டனம் வடபகுதியில் கிளர்ந்துள்ளதாக தெரிகிறது.

சிகிச்சை பெறுவதற்காக அரசினர் ஆஸ்பத்திரிகளின் வாசல்களில் தினந்தோறும் பல நூற்றுக்கணக்கான மக்கள் காலை 7 மணிக்கு முன்னதாக காத்துக் கிடந்தும், ஆமை வேகத்திலேயே அவர்கள் கவனிக்கப் படுகிறார்கள். பெரிய தெய்வங்களான 'டொக்டர்' மார்கள் பரிசோதிப்பதற்குமுன், குட்டித்தெய்வங்களின் சுட்டிப் பேச்சுக்கும் திட்டுதல்களுக்கும் நோயாளிகள் ஆளாகிறார்களாம். இப்படி அரசினர் ஆஸ்பத்திரிகளின் வெளிநோயாளர் பகுதியில் அன்றன்றாடம் நடக்கிறது.

கர்ப்பிணிகள் விடுதியில் (Maternity Ward) பிரசவத்தைக் காத்திருக்கும் பெண்களுக்கு தாதிமார்களிடமிருந்து கிடைக்கிற வசவுகளும் கிண்டல்களும் அதிகரித்துவிட்டதாகவும் அதனால் அந்தப் பெண்கள் பெரும் மனத் துன்பத்துக்கு ஆளாகி - ஆஸ்பத்திரிகளிலிருந்து பூரண குணமடைவதற்கு முன்பே வெயேறிவிடுவதாகவும் தெரிகிறது.

சில்லறை ஊழியர்களிடம் நிலவும் ஒழுங்கீனங்களைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய 'பெரியவர்' களும்— கடமை நேரத்திலேயே 'காதல் நாடகங்களில்' ஈடுபட்டிருந்த பல நிகழ்ச்சிகள் அண்மையில் இலாகாத் தலைமைப் பீடத்துக்குத் தெரியவந்துள்ளதாம். ஆஸ்பத்திரி நேரத்தில் குடிபோதையில் மயங்கி டாக்டர்கள் அசட்டையாயிருப்பதால் பல தடவைகளில் அவசரநோயாளிகளின் உயிர்கள் ஊசலாட நேர்ந்திருப்பதாகவும் பொதுமக்கள் குறைபட்டுக்கொள்கிறார்கள்!

அரசினர் ஆஸ்பத்திரிகளின் ஊழல்கள் இப்படியிருக்கும்போது பணம் வசூலிக்கிற தனிப்பட்ட ஸ்தாபனங்களால் நிர்வாகிக்கப்படுகிற மருத்துவச் சாலைகளில் வேறு உருவத்தில் அலங்கோலங்கள் தாண்டவமாடுகின்றன. மருந்து கலக்கும் சாலையில் அருவருக்கத்தக்க காதல் சம்பாஷணைகளும், நிகழ்ச்சிகளும் நடக்கிறதாம்! பணத்தைச் செலுத்திவிட்டு மருந்துக்காக நோயாளிகள் விருந்தையில் காத்துக் கிடக்க கொஞ்சமும் பொருட்படுத்தாது உள்ளே கடமை புரிகிற ஆண் கம்பவுண்டர்கள் தாதிமார்களுடனும் டெலிபோன் பெண்ணுடனும் மணிக்கணக்காகப் பேசிப் பல்லிளிக்கிறார்களாம்.

ஆஸ்பத்திரிகளின் ஊழல்களை சம்பந்தப்பட்ட மேலிடங்களுக்குத் தெரிவிப்பதற்காக வெறுப்புற்ற பொதுமக்கள் பலர் பல மனுக்களைத் தயாரித்துக் கொண்டிருப்பதாக 'புதின' த்துக்கு நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

சீதா ஸ்பெஷல்
குளிர் பானங்கள்

வடமாகாணம் முழுவதும் எல்லாரும் விரும்பி வாங்கிப் பருகுவது
சீதா ஸ்பெஷல் பானங்களே!

உங்கள் கல்யாண வைபவங்களையும் மற்றும் பலவித கொண்டாட்டங்களையும் சிறப்பித்து மகிழ்விப்பது
சீதா ஸ்பெஷல் 'கொக்கோ கோலா!'
டெலிவரி இனம்!

சீதா சோடா பாக்டரி
291, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 576 தந்தி: 'சீதா' (SITA)

இப்பொழுதே உங்கள் ஆடர்களை அனுப்புங்கள்
1962—ம் ஆண்டுக்கு—
ஆனந்தா திருக்குறள் கலண்டர்கள்
மிகச்சிறப்பான முறையில் தயாராகிக்கொண்டிருக்கின்றன:

ஆனந்தா திருக்குறள் கலண்டர் (No1.)
இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் விசேட தினங்களும், அரசாங்க வங்கி விடுமுறைத் தினங்களும், கொடியேற்றம் தேர்த் திருவிழா முதலியனவும், குரு பூஜைத் தினங்களும், பெரியோர்களின் நினைவு தினங்களும், இக்கலண்டரில் கிரமமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இவை தவிர, நாள்தோறும் நட்சத்திரம், யோகம். சுபநேரம், ராகுகாலம், முதலியனவும் பிரம்மஸ்ரீ இரகுநாதையரவர்களின் வாக்கிய கணிதப்படி குறிக்கப்பெற்றுள்ளன.

அன்பளிப்புச் செய்வதற்கு ஏற்ற
ஆனந்தா அறிவுரைக் கலண்டர் (No. 2) ஆனந்தா மூன்று தேதிக் கலண்டர் (No. 3)
ஆனந்தா வாரக்கலண்டர் (No. 4) ஆனந்தா ரேல் கலண்டர் (No. 5)
ஆகியவைகளும் தயாராகின்றன.
விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள்!

ஆனந்தா அச்சகம், 226, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'